Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 20 .00

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை (28.06.2015) —பக்கங்கள் 20 ஓசை – 271



## அரசியல் எதிர்காலம் இல்லாத மகிந்த ஓய்வுபெற வேண்டும்

### கூறுகிறார் பொன்சேகா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு அரசியல் எதிர்காலம் கிடையாது எனவும், அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என்றும் ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுளார்.

அத்துடன், மகிந்த மீண்டும் அரசியலுக்கு வருவார் என்பதைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாது எனக் குறிப்பிட்ட அவர், மஹிந்தவை மீண்டும் அரசியலுக்குள் கால்பதிக்க விடமாட்டோம் என்றும் சூளுரைத்தார்.

பெலவத்தையில் நேற்று நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் வருடாந்த மாநாட்டின் நிறைவில் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

அவருக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது. அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் மீள்பிரவேசம் தடுக்கப்படும் என்கிறார் ரணில்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீள் பிரவேசத்தை தடுப்பதற்காக எதிர்வரும் பொதுத்தேர்தலை ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்துமென பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்..

நாவலப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த போதும், அவரை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வரும் நடவடிக்கைள் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

எனினும் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் மகிந்தவின் திட்டத்தை தோற்கடித்து ஐக்கிய தேசியக்கட்சி பொதுத் தேர்தலில் வெற்றிபெறுமென ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்தே போட்டியிடுமெனவும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடப போவதில்லை எனவும் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

# நீதியான தேர்தலை நடாத்த ஒத்துழைப்பு தர மறுத்தால் அதிகாரிகளுக்கு தண்டனை



## தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை நீதியான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கும் அரச அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு நீதிமன்ற தண்டனை விதிக்கப்படுமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெறுமென ஜனாதிபதி நேற்று முன்தினம் இரவு அறிவித்த பின்னணியில் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய தேர்தல்கள் ஆணையர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசியல் யாப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய தனக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறிய மகிந்த தேசப்பிரிய, நீதியான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்கத் தவறும் அரச பணியாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக விளக்கினார்.

இப்படியான வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்படும் அரச பணியாளர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தணடனையும் ஒரு இலட்சம் ரூபா வரை அபராதம் விதிப்பதற்கும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச வளங்கள் பயன்படுத்துவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று கூறிய தேர்தல்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் செலவு 400 கோடி

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் செலவுகளுக்காக 400 கோடி ரூபா ஒதுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பு, இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முற்பகல் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## இரண்டு கட்டங்களாக உ/த பரீட்சை

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம், ஆகஸ்ட் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் உயர்தரப் பரீட்சை 13 ஆம் திகதி வரையிலும் நடைபெறும்.

அதன்பின்னர் ஆகஸ்ட் 24

19 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றிலிருந்து குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு தையல் நாயகி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கிணற்றிலிருந்து குடும்பப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தாயான மேர்வின் கமலநாயகி (வயது - 65) என்பவரே உயிரழந்தவராவார். நேற்று மதியம் 12 மணியளவிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுத் தேர்தலில் போட்டி; தமிழரசுக் கட்சி ஆராய்வு

(திருகோணமலை)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்று திருகோணமலை தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்றது.



காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் மாலை 6.20 மணிக்கு நிறைவடைந்தது.

தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்து கொண்டார்.

கூட்டம் நிறைவடைந்ததும் இது பற்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமான தேர்தல் ஆகும்.

இதில் தமிழ் மக்கள் அதிக பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இப்பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள நாம் மேற்கொள்ள வேண்டிய

19 ஆம் பக்கம் பார்க்க

## சீனாவின் அதிகாரத்தை முறியடிக்க வியூகம் வகுக்கிறது இந்தியா

### இலங்கையுடன் கடற் போர்ப்பயிற்சி

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலுக்குள் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிக்கும் வகையில், இலங்கை உள்ளிட்ட முக்கியமான ஆசிய பசுபிக் நாடுகளுடன் இந்தியா கடற்படைப் போர்ப்பயிற்சிகளை நடத்தவுள்ளது என ரைம்ஸ் ஒவ் இந்தியா தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனா தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வருகிறது.

குறிப்பாக தனது கடற்படையின்

19 ஆம் பக்கம் பார்க்க

# மாற்று வலுவுள்ளோருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் வலியுறுத்து



(ஊற்றுப்புலம்)

எங்கள் சமூகத்தில் உள்ள மாற்றுவலுவுள்ளோருக்கு நாங்கள் செய்யவேண்டியது முதலில் அவர்களுக்கு தன்னம்பிக்கையினை ஏற்படுத்தவேண்டும் என வடக்கு மாகாணசபை உறுபபினர் வை.தவநாதன் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் ஊற்றுப்புலம் மாற்றுவலுவுள்ளோர் கிராமிய அமைப்பின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊற்றுப்புலம் கிராமத்தின் மாற்று வலுவுள்ளோர் தொடர்பில் நாங்கள் ஆரம்பம்தொட்டு அதிக அக்கறையோடு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். மாற்றுவலுவுள்ளோர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படல்வேண்டும். அதன்மூலம் நிரந்தர வருமானம் பெறும் வகையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் அவசியமாகிறது. எனக் குறிப்பிட்ட அவர் ஏற்கனவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவாகள் குறிப்பிட்டதற்கு அமைவாக எனது மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு இலட்சம் ரூபாவினை ஊற்றுப்புலம் மாற்றுவலுவுள்ளோர் கிராமிய அமைப்புக்கு ஒதுக்கீடு செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வேலைவாய்ப்புகளில் மாற்று வலுவுள்ளோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளுக்கு மூன்று வீத ஒதுக்கீடு என்ற தீர்மானம் வடக்கு மாகாணசபையில கொண்டுவரப்பட இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை இந்த மூன்று வீதம் என்பது போதுமானது அல்ல. கடந்தகால யுத்தம் எங்கள் சமூகத்தில் அதிகளவானவர்களை மாற்றுவலுள்ளோர்களாக மாற்றியுள்ளது. எனவே பத்து வீதம் ஒதுக்கீடு செய்வதே பொருத்தமானதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

ஊற்றுப்புலம் மாற்று வலுவுள்ளோர் கிராமிய அமைப்பின் தலைவர் சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஊற்றுப்புலம் பாடசாலை அதிபர் உமா சங்கர், கிராம அலுவலர் யதுகுலன், கமக்கார அமைப்பின் தலைவர் ஆனந்தன், மாதர் சங்கத் தலைவி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வைத்திய அத்தியட்சகரின் கௌரவிப்பு ஒத்திவைப்பு

தெல்லிப்பளை. ஆதார வைத்தியசாலையில் கடந்த மூன்று வருடங்களாக வைத்திய அத்தியட்சகராக சேவைபுரிந்த வைத்திய கலாநிதி மு.உமாசங்கருக்கு தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைச் சமூகம் சேவைநயப்பு விழாவினை நடாத்தவிருந்தது. இருப்பினும் இவ் விழாவானது தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது

இந்த நிகழ்வானது நேற்றைய தினம் சனிக்கிழமை இடம்பெற இருந்தபோதிலும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறுமென தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்
..............................
பெற்றோர் கையொப்பம்

# பொதிகளைக் கையாளும் வசதியின்றி இயங்கிவரும் புகையிரத நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

பொதிகளைக் கையாளும் வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் பல புகையிரத நிலையங்களில் பொதிகளைக் கையாளும் சேவை இன்னும் ஆரம்பிக்கப் படவில்லையென யாழ். புகையிரத நிலைய அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் பிரதான நகரங்களிலுள்ள புகையிரத நிலையங்களில் பொருட்களைக் கையாளும் கூடம், மற்றும் பொருள் நகர்த்தி என்பவற்றுடன் பல வசதிகள் இன்னமும் ஏற்படுத்தப்படாமையால் அப் புகையிரத நிலையங்களில் பொதிகளை கையாளும் செயன்முறை நடைபெறுவதில்லை.

ஆனால் யாழ். புகையிரத நிலையத்தில் பொதிகளைக் கையாளும் சேவை இடம்பெறுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சிறிய நகரங்களிலுள்ள புகையிரத நிலையஙக ளுக்கு இந்தச் சேவையை விரைவில் விரிவுபடுத்துவதன்மூலம் தமது சேவைகளை சுலபமாக்க முடியுமென மக்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

# காணித் தகராறு அடிதடியில் முடிந்தது

## தாயும் மகளும் காயம்

(யாழ்ப்பாணம்)

காணித் தகராறில் பெண்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகலில் தாயும், மகளும் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பொன்னாலை கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த நரசிங்கம் தவமணி(வயது 77) நரசிங்கம் மகாலக்ஷ்மி (வயது 45) என்ற தாயும் மகளுமே படுகாயமடைந்துள்ளனர்.

காணிகளுக்கிடையில் ஒழுங்கை அமைப்பது தொடர்பில் இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட நீண்டகால முறுகலையடுத்து பொலிஸ் நிலையம்வரை சென்றபோதிலும், நேற்றுக்காலை 9.30 மணியளவில் இருதரப்பு பெண்களுக்கிடையே ஏற்பட்ட முறுகலில் இரு பெண்கள் கொட்டன், பொல்லுகளால் தாய், மகள் இருவரையும் தாக்கியுள்ளனர். இதில் இருவரும் மண்டையோடுகள் உடைக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)



யாழ். நகர்ப் பகுதியில் வழித்தட அனுமதியின்றி கொண்டுவரப்பட்டு நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட 391 சாராயப் போத்தல்களையும், அதனைக் கைப்பற்றிய பொலிஸாரையும் காணலாம். (இ)

## என்.வி.கியூ கற்கைகளுக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்திலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி நிலையத்தில் (VTA) தேசிய தகைமைக்குரிய தொழிற்பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஆடி மாதம் ஆரம்பமாகவுள்ள இப் புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், மேலதிக விபரங்களுக்கு நிலையப் பொறுப்பாளர் உ.தினேஸ்குமாருடன் (021 228 5687, 0776684302) என்ற தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்புகொண்டு விபரங்களைப பதிவுசெய்யமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

இந்து மத கலாசார மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுடனான கலந்துரையாடலை யாழ். முகாமையாளர் சம்மேளனம் (JMT) ஏற்பாடு செய்துள்ளது. நாளை மறுதினம் மாலை 5 மணியளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்சந்திப்பானது நல்லூர் யுரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீட்டுக்கடன் திட்ட காசோலைகள் வழங்கல்

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீட்டுக்கடன் திட்ட கொடுப்பனவுக் காசோலைகள் நேற்று சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன் தலைமையில் தேசிய வீடமைப்பு அதிகார சபை மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மகளிர் விவகார பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால், வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, மானிய அடிப்படையிலான்; குறைந்த வட்டிவீத வீட்டுக் கடன உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், யாழ். மாவட்டத்திலுள்ள 10 தொகுதிக்கும் 3000 வீடுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டமாக நல்லூர் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 125 பேருக்கு வீடு கட்டுவதற்கான வீட்டுக்கடன உதவிகள் வழங்கிவைக்கப்பட்டது.

அதேநேரம், 50 பேருக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது. 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீட்டுக்கடன் திட்டத்தில் முதற்கட்டமாக நேற்று 1 இலட்சம் ரூபாவிற்கான காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டன. ஏனைய தொகுதியைச் சேர்ந்த வீட்டுத்திட்ட கடனாளிகளுக்கான வீட்டுக் கடன் உதவிகள் தொகுதிவாரியாக வழங்கி வைக்கப்படுமென்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார். (25)

# சொல்லின் செல்வருக்கு இன்று மணி விழா

## மணி விழா நாயகன் நீடூழி வாழி

திரு.இரா.செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு மிக நீண்டகாலமாக ஈடுபாடு கொண்டதோடு அல்லாமல், ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகலவிதமான பணிகளுக்கும் தன்னாலான சேவையை வழங்குவதில் தன்னிகரில்லா பெருந்தகை.

ஆசிரியர் அவர்கள் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை தமது அறுபதாவது அகவையில் காலடி வைப்பதையிட்டு பெருமிதம் கொள்வதோடு ஐயா அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும் சேவையாற்ற சந்நிதியானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

குருபணியில்,
**மோகன் சுவாமிகள்**
சந்நிதியான் ஆச்சிரமம் செல்வச்சந்நிதிதொண்டைமனாறு.

## அருளாசிச்செய்தி

கல்விச் செல்வத்தை வழங்கி மாணவர் சமுதாயத்தை மேலோங்கச்செய்யும் பணியில் சிறப்புற்றுத் திகழும் ஆசிரியர் திலகமாகிய விஞ்ஞான ஆசான் திரு.இரா.செல்வவடிவேல் அவர்களின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளியிடப்பெறும் மணி விழா மலருக்கு அருளாசிச்செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.


'மாணவர் சக்தி மாபெரும் சக்தி' என்றபடி எதிர்காலம் சிறப்புற கல்வி விருத்தி செய்து 'சேவையே தமது தேவை' என்று துலங்குகின்ற ஆசிரியர் திலகம் அவர்கள் அகவை அறு-பதில் அளப்பரிய சேவையாற்றும் தன்மையில் உயர்வுற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டும் என்றும் எல்லாம் வல்ல நல்லைக்கந்தனைப் பிரார்த்தித்து அருளாசிகள் வழங்கி மகிழ்கின்றோம்.

மணிவிழா நாயகன் நல்லபடி வாழ்ந்து அனைவருக்கும் மகிழ்ச்சியை வழங்கி இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

"ஆசிரிய திலகம்" "விஞ்ஞான ஆசான்" "சொல்லின் செல்வர்"

## உயர்திரு. இரா. செல்வவடிவேல்



**தந்தை** : ஆ.இராமசாமிச்செட்டியார்
**தாய்** : இ.சுப்பம்மாள்
**மனைவி** : செ.சியாமளா
**பிள்ளைகள்** : மிருணாளினி அமலன், தர்மினி பரமேஸ்வன், கணேசவேல், ரிஷிகோபன்
**பேரப்பிள்ளைகள்**: ப.ஜெயதுர்க்கா, ப.சுருதிகா
**சகோதரர்கள்** : குருவம்மாள் சாத்தவராயன், வசந்தி பாலாஜி, இரா.பால்ராஜ் (அமரர்), செல்வராணி கதிர்காமநாதன்

**முதன்முதல் தனியார் கல்வி நிறுவன சேவை:**
BRIGHT BEST INSTITUTE - KOKUVIL
01.01.1972 விஞ்ஞான ஆசிரியர்

**கற்பித்த தனியார் கல்வி நிறுவனங்கள்:**
BOND INSTITUTE – யாழ்ப்பாணம்
VIGNESWARA – வேலணை, புளியங்கூடல்
STAR கல்வி நிலையம் – கரம்பன்
PAN – கல்வி நிலையம் – பண்டத்தரிப்பு
ROYAL – கல்வி நிலையம் – மூளாய், சுழிபுரம்
அருள் கல்வி நிலையம் – வட்டுக்கோட்டை
SCIENCE ACADEMY – நெல்லியடி, அச்சுவேலி
பிரத்தியேக கல்வி நிலையம் – கொட்டடி, யாழ்ப்பாணம்
YARL HALL கல்வி நிலையம் – யாழ்ப்பாணம்
MANI கல்வி நிலையம் – தலையாழி, கொக்குவில்
NIRU கல்வி நிலையம் – கோண்டாவில்
BITSMAN கல்வி நிலையம் – மானிப்பாய்
EDISON கல்வி நிலையம் – யாழ்ப்பாணம், நல்லூர், கொக்கு வில், வட்டுக்கோட்டை
ROYAL கல்வி நிலையைம் – யாழ்ப்பாணம், நல்லூர்

**பொதுப்பணி:**
01. தலைவர், சைவசமய அபிவிருத்திக் கழகம், சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
02. செயலாளர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்
03. உபதலைவர், கலாசாரப் பேரவை, யாழ்.பிரதேச செயலகம்
04. தலைவர், கலை பண்பாட்டுப்பேரவை, யாழ்ப்பாணம்
05. தலைவர், வட மாகாண கல்வி அபிவிருத்திக்குழு
06. செயலாளர், தமிழ்ச்சங்கம், யாழ்ப்பாணம்
07. செயலாளர், யாழ்.போதனாவைத்தியசாலை அபிவிருத்திக்குழு.

**விருதுகள்:**
01. ஆசிரியர் திலகம், சொல்லின்செல்வர் – நரசிங்க வைரவர் தேவஸ்தானம், இணுவில்
02. செஞ்சொற்செல்வர் – ஸ்ரீகாளிகா தேவஸ்தானம், யாழ்ப்பாணம்
03. செஞ்சொல்வாணர் – வைசவித்தியா விருத்திக் கழகம், திருநெல்வேலி
04. பிரசங்க திலகம் – பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
05. செஞ்சொற்சுரபூபதி – பிள்ளையார் தேவஸ்தானம் உப்புமடம்
06. சமூக திலகம் – கொட்டடி சனசமூக நிலையம்
07. சிவநெறிச்செல்வர் – வட்டுக்கோட்டை முருகன் ஆலயம்
08. சைவத்தமிழ் வேந்தன் – கடையிற்சுவாமி தேவஸ்தானம், யாழ்ப்பாணம்
09. யாழ் ரத்னா விருது – கலாசாரப் பேரவை, யாழ்ப்பாணம்
10. "தேசபந்து" விருது – கலாசாரப்பேரவை, கொழும்பு

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 42 ஆண்டுகளுக்கு முன்பு நான் சந்தித்த இனிய சகோதரன் இரா.செல்வவடிவேல் அவர்களை வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். கல்லூரியின் மாணவ முதல்வனாக, நாகலிங்கம் இல்ல தலைவனாக, கடேட் அணித்தலைவராக, பிரபல்யம் பெற்ற சொற்பொழிவாளராக எங்கள் மத்தியில் சிறப்புற விளங்குகின்றார். கல்லூரிக் காலத்திலேயே இவரது நடை, உடை, ஆளுமை ஆகியன தனித்துவம் பெற்று இருந்தது. இளையவர்களாகிய நாம் அவரை ரசித்தோம்.

விஞ்ஞான ஆசிரியராக கடந்த 40 ஆண்டுகள் இம்மண்ணில் சேவை செய்து வரும் அன்புச்சகோதரனுக்கு பிரியமானவர்கள் எடுக்கும் மணிவிழா குறித்து பூரிப்படைகிறேன். இறையருளாலும் பெரியோர்களின் ஆசியினாலும் இவரை பல்லாண்டு வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
தலைவர், தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம்.

## ஆளுமை மிக்க விஞ்ஞான ஆசிரியர்



மதிப்பிற்குரிய விஞ்ஞான ஆசிரியர் திரு.இரா. செல்வவடிவேல் அவர்களின் மணி விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி-யடைகின்றேன். ஒரு கடுமையான பாடத்தை ஒரு மாணவனுக்கு எப்படி இலகுவாகக்கற்பிக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டான ஆசிரியர் திரு.இரா.செல்வவடிவேல்தான் எனக்கூறலாம். ஆயிரக்கணக்கான மாணவர்களை தனியார் கல்வி நிலையங்கள் ஊடாகக்கற்பித்து அவர்களை நல்ல கல்விமான்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் வாழ வழிகாட்டியவர் இவர்தான். கால் நூற்றாண்டுக்கு மேலாக விஞ்ஞானத்தைக் கற்பித்து மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் நற்பெயரைப் பெற்றுக் கொண்ட இவர் மாணவர்கள் பெருமளவில் மிகச்சிறந்த பரீட்சைப் பெறுபே-றுகளைப் பெற்றுக்கொள்ளக்காரணமாக இருந்தவர் எனக்கூறினால் அது மிகையாகாது.

இவர் எவர் சமூக சேவையுடன் ஈடுபாடு கொண்டிருந்தாலும் அந்த ஊக்குவிக்கும் மனோபவம் கொண்டவராக காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். கல்வி, ஒழுக்கம், சமூகசேவை ஆகிய மூன்று விடயங்களிலும் அக்கறையுடன் தொழிற்பட்டு வரும் திரு.இரா.செல்வ்வடிவேல் அவர்கள் இந்த வையகத்தில் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து பேருடனும் புகழுடனும் வலம்வர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர். க. தேவராஜா** (தலைவர், மணிவிழாச்சபை)
தலைவர், வணிகத்துறை – யாழ்.பல்கலைக்கழகம்.

## "சொல்லின் செல்வரே வாழி வாழி"





அறுபதில் அகவை காணும்
ஆளுமைகொண்ட ஆசான்
அருங்கல்வி புகட்டி நீயும்
அளவிலாச் சேவை செய்தாய்
அஞ்ஞானம் அகற்றி நீயும்
விஞ்ஞானம் புகட்டி வாழ்ந்தாய்
மெஞ்ஞான அறிவு கொண்டே
மேன்மை நற்புகழும் கொண்டாய்.

அண்ணலே அறிவின் செல்வா
அளவில்லா மாணவர்தம்
எண்ணிலா உயர்வுக்காய்
உழைத்த உன் பெருமை கண்டோம்
எத்தனை வைத்தியர்கள்
எத்தனை பொறியியலாளர்
என்றேல்லாம் ஏற்றம் பெற
என்றுமே உழைத்து வந்தாய்

உள்ளத்தில் உவகை கொண்டாய்
உத்தம பண்பு கொண்டாய்
பிள்ளைகளின் உயர்வு கண்டாய்
பேர் பல புகழும் பெற்றாய்
பட்டங்கள் பலவும் பெற்றாய்
பண்போடு வாழ்ந்துள்ளாய்
அன்பனே நீ வாழி வாழி
பல்லாண்டு வாழி வாழி.

**ஞான. திருக்கேதீஸ்வரன்**
அதிபர், K.T.C. (கோண்டாவில்)

**இரா. அருட்செல்வம்**
அதிபர், A.T.C. (இணுவில்)

மலர் அனுசரணை தினமுரசு

## ஆசியுரை

அன்பான இரா.செல்வவடிவேல் ஐயா அவர்களின் மணிவிழா 28.06.2015 ஆகிய இன்று கொண்டாடப்படுவதும், அதனையொட்டி மணிவிழா மலராக "செல்வநாதம்" வெளியிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரிய விடயங்களாகும். செல்வவடிவேல் ஐயா அவர்கள் எமது மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருக்கின்ற பணி அளப்பரியது. செல்வவடிவேல் ஐயா அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்த்திட, பணி பல செய்திட எல்லாம் இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

இறைபணியில்,
**ஜாக்ரத சைதன்யா**
வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன் – யாழ்ப்பாணம்.

## "சொல்லின் செல்வர்" பற்றி சொல்லால் சில வரிகள்



என் உடன் பிறந்த சகோதரர்களின் ஒருவராகவே இரா.செல்வவடிவேல் அவர்களை இதுவரை காலமும் நான் மதித்தேன், மதித்து வருகிறேன். எதிர்காலத்திலும் மதிப்பேன். இத்தனை நெருக்கமான உறவுகொண்ட என் சகோதரனுக்கு "மணி விழா" வந்து விட்டது என்று ஆயத்தங்கள் நடைபெறுகின்றது என்பது நம்பமுடியாததொன்றாகவே உள்ளது. அவரது சொல்லும் செயலும் உறுதி வாய்ந்தது. அது போன்றே அவர் உடலால் உறுதி பெற்று என்றும் இளமையானவர் போன்ற காட்சி மறக்க முடியாத தோற்றமாக உள்ளது.

காலத்தால் அழியாத பல்துறை பணிகளை ஆற்றிய பல்துறை விற்பன்னரான என் சகோதரனுக்கு மணிவிழா நாளின்போது வெளியிடப்படும் மணி விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**சீ.மாணிக்கராஜா** (உப தலைவர், மணிவிழாச்சபை)
பிரதிக்கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணக்கல்வி வலயம்.

## என்னோடு உறவாடிய உற்ற நண்பன்



இரா.செல்வவடிவேல் விஞ்ஞான ஆசானாய் விளங்கிய விந்தை மிகு மனிதன் – தன் குடும்ப நிலை காரணமாக உயர்தரக்கல்வியுடன் தன்னை தனியார் கல்வி நிலையத்தினூடாக ஓர் விஞ்ஞான ஆசிரியராக தன் தடத்தினைப்பதித்து யாழ்மண்ணில் ஓர் பிரபல விஞ்ஞான ஆசிரியராக தன் பெயரைப்பதிவு செய்து இன்று வரை தன்பணி தொடர்கின்ற ஓர் உத்தம புருஷன். இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் இன்று மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக திகழ்கின்றார்கள் என்பது இவரின் பெயருக்குப்புகழ்சேர்க்கின்றது.

இவற்றுக்கு மேலாக எனது உற்ற நண்பனாக நான் வடிவேலைப் பார்க்கின்றேன். தனியார் கல்வி நிலையத்தினூடாக தொடர்ந்த எங்கள் நட்பு எங்கள் குடும்ப உறவுவரை தொடர்ந்து வருகிறது. இன்ப துன்பங்களில் தவறாது பங்கேற்கும் உறவுகளாக நானும் வடிவேலும் கலந்து கொள்கின்றோம்.

'சொல்லின்செல்வராய்' விளங்கிடும் என் நண்பன் வடிவேலின் மணிவிழா சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**சண். வாமதேவன்**
ஓய்வுநிலை அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷண ம.வி.

## கல்விப் பெருஞ் செல்வம்



கடவுள் மனிதர்களைப்படைக்கும் பொழுது ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு திறமையைக்கொடுத்து இந்த உலகிற்குச்சிருஷ்டிக்கின்றார். ஆனால் ஆயிரத்தில் ஒருவரை பல்துறை விற்பன்னர்களாகப்படைக்கின்றார். இராமசாமிச்செட்டியார் செல்வவடிவேல் – இந்தக்கதாபாத்திரம், வடபுலத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தில் தெரியாதவர்களே இல்லை எனலாம். சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோருக்கும் அவரவர் துறைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்றவாறு நாடக்கூடிய கல்வி, கலை, கலாச்சாரம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், சமூகப் பணி, அறப்பணி, ஆன்மீகப்பணி, சமயப்பணி, தமிழ்ப்பணி என்று எனக்குத் தெரிந்த தசாவதானி இவர். கம்பன் கண்ட இராமன் போல நான் அவருடைய புகழை அருகில் நின்று அனுபவித்தவன். இரா.செல்வவடிவேல்–சியாமளா தம்பதியருடைய அறப்பணிகள் தொடரவேண்டும்.

**வாழ்த்துகின்றேன்–வணங்குகின்றேன்–பணிகின்றேன்**

**பி. என். சுதர்ஷன்**

உன் மேல் அன்பு செலுத்துகிறவர்களை நேசி. உன் மீது கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி. - அன்னை திரேசா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மின்கழிவுகளால் வரும் ஆபத்து!

சுற்றுச் சூழலுக்கு பிளாஸ்ரிக் பொருட்கள் தீங்கானவை பிளாஸ்ரிக் பைகள் மற்றும் பொருட்களின் பாவனையைத் தவிர்க்கச் சொல்லி பல நாடுகளில் அதை நடைமுறைப்படுத்தவும் முடிகிறது.

ஆனால் உலகம் இப்போது e-waste என்று சொல்லப்படுகிற மின்கழிவுகளால் கலங்கிப் போயிருக்கிறது. பிளாஸ்ரிக்கைப் போல இவை மனிதர் இன்று தவிர்க்கக் கூடியன அல்ல.

மின்கழிவுகள் என்றால் என்ன? பயனற்ற மின்சாதனப் (Electrical) பொருட்களும், மின்னனுப் (Electronic) பொருட்களும் மின்கழிவுகள் எனப்படுகின்றன.

அதாவது செல்போன், கடிகாரங்கள், அவற்றின் மின்கலம் (battery), கணனி, கணனி சார்ந்த துணை உபகரணங்கள், செப்பு வயர்கள், மின்சுற்று (Electric Circuit), எல்சி.டி. திரை, குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, சலவை எந்திரம், பாதரச விளக்குகள் மற்றும் எல்லா மின்சார்ந்த பொருட்களும் இந்தப் பட்டியலில் அடங்கும்.

இந்தப் பொருட்களெல்லாம் ஈயம், காட்மியம், பெரிலியம், தாமிரம், வெள்ளீயம், சிலிக்கன் இரும்பு, அலுமினியம், பாதரசம் போன்றவற்றாலும் தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களும் கொண்டே தயாரிக்கப்படுகின்றன.

இதனைச் சாதாரண குப்பையில் போடும்போது சுகாதாரமற்ற முறையில் இந்தப் பொருட்கள் தெரிந்தோ, தெரியாமலோ எரித்துப் பிரிக்கப்படுகின்றன. இந்த விஷக் கழிவுகள் சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றன.

தூக்கி எறியப்பட்ட மின்கலங்கள் (அதாவது சாதாரண பற்றரிகள்) ஒரு உயிர்க்கொல்லி என்று பலரும் அறிந்ததில்லை. இந்த மின்கலத்திலுள்ள பொட்டாசியம் ஐதரொக்ஸைட் எளிதில் நீருடன் சேர்ந்து மின்கலனை அரித்து, உள்ளிருக்கும் பாதரசத்தை மண்ணோடு கலந்துவிடுகிறது.

பாதரசம் மூளை நரம்புகளைப் பாதிக்கும் இரசாயனப்பொருளாகும், இது எளிதில் காற்றிலும் நீரிலும் கலந்து மனித உடலுக்குள் சென்று, மனப்பிறழ்ச்சி, கோமா, தற்கொலையுணர்வு என பலவித பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்று சூழலியலாளர்கள் எச்சரிக்கிறார்கள்...

உலகத்தின் புத்தம்புது அதிசயம், உலகம் இனி உங்கள் கையில் எனக் கூவி கூவி விற்கப்பட்ட அனைத்து அதிநவீன பொருட்களும் சில வருடங்களில் மின்–கழிவுகளாக மாறி, நமக்கு எதிராகத் திரும்பப் போகின்றன – திரும்புகின்றன. இன்று தூக்கி எறியப்படும் மின்கழிவுகள் எல்லாம் நாளை நம் உயிருக்கு எமனாக மாறக்கூடியவைகளே.

பிளாஸ்ரிக் போல கண்ட இடங்களில் இவற்றைத் தூக்கியெறிவது பேராபத்தை விளைவிக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்வதுடன் எல்லோருக்கும் உணர்த்தவும் வேண்டும். இந்த மின்கழிவுகள் ஒழுங்காக ஓரிடத்தில் சேர்க்கப்பட்டு, அவற்றை உற்பத்தி செய்த நிறுவனங்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட ஏற்பாடு வேண்டும்.

நீர்நிலைகள், விவசாயம் செய்யும் பகுதிகள், இயற்கை வனங்கள் போன்ற பகுதிகளில் கட்டாயம் இவற்றை வீசக்கூடாது. இதற்கென முறையான மின்கழிவு மேலாண்மை செய்யக்கூடிய நிறுவனங்கள் உருவாக வேண்டும். அவை இவற்றைச் சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்ப வேண்டும்.

நாமும் எலக்ட்ரோனிக் பொருட்களின் மீதான பேராவலைத் தணிப்பதுடன், முறையான மறுசுழற்சி செய்து மாசு குறைக்கும் நிறுவனப் பொருட்களை வாங்கி விற்பதற்கு நம் வர்த்தகர்களை வலியுறுத்த வேண்டும்.

இவை அனைத்தையும்விட மிக முக்கியமாக, மக்களிடையே இவற்றின் ஆபத்து குறித்த விழிப்புணர்வைக் கொண்டு வரவேண்டும். நாம் இந்த மின்கழிவுகளை அலட்சியமாக குப்பைகளில் எறிந்தும் எரித்தும் வருவதிலுள்ள ஆபத்தைப் புரிந்துகொள்ள

# யுத்தப்பாதிப்பிற்கு இழப்பீடு நடவடிக்கை துரிதம்

(கொழும்பு)

உள்நாட்டுப் போரினாலும் இன வன்முறைகளினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளை துரிதமாக வழங்க தற்போதைய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே இழப்பீடு வழங்கப்படாத நிலையில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் நிர்வாகத்திலுள்ள புனர்வாழ்வு அதிகார சபையில் ஆயிரக் கணக்கான விண்ணப்பக் கோப்புகள் ஆண்டுக்கணக்கில் தேங்கிக் கிடப்பதாக கூறப்படுகின்றது.

புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு எடுத்துள்ள புதிய தீர்மானத்தின்படி அந்தக் கோப்புக்களை மீளாய்வு செய்யும் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்றுவருகின் றன.

இதன் காரணமாக எதிர்காலத்தில் இழப்பீடுகள் வழங்குதலை துரிதப்படுத்த முடியும் என அதிகாரிகள் நம்புகின்றார்கள்.

புனர்வாழ்வு அதிகார சபையின் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு கோப்புக்களுடன் சென்று விண்ணப்பதாரிகளுடன் சந்திப்புக்களை நடாத்தி படிவங்களைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் இரு நாடகளில் 1500 பேரின் கோப்புகளிலுள்ள ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான ஆவணங்களும் புதிதாக இணைக்கப்பட்டுக் கோப்புக்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே விண்ணப்பங்களை முன்வைத்துள்ள பலர் உரிய ஆவணங்களை இணைக்காததன் காரணமாகவே அவர்கள் தமது இழப்பீடுகளை பெறுவதில் 12 முதல் 15 ஆண்டுகள் வரை தாமதங்கள் ஏற்படுவதாக புனர்வாழ்வு அதிகார சபையின் நிறைவேற்று இயக்குநரான வி.புகேந்திரன் கூறினார்.

# போதைப்பொருள் கடத்தல் அரச நிறுவனங்களுக்கு தொடர்பு

## கசிகிறது தகவல்

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள இரு அரச நிறுவனங்கள் குறித்து மக்களிற்கு தெரியப்படுத்தப் போவதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சிறிசேனவைச் சந்தித்து அவரிடம் குறிப்பிட்ட இரு நிறுவனங்கள் எவை என்ற விபரத்தை கோரவுள்ளேன். பின்னர் அதனைப் பொது மக்களிற்கு பகிரங்கப்படுத்துவேன், பொலிஸ் மா அதிபரிற்கும் தெரிவிப்பேன்.

போதைப்பொருள் பிரச்சினை மிகப்பாரிய அபாயமாக மாறியுள்ளது,போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவர்கள் சமூகத்தில் எவ்வளவு முக்கியமான நபர்களாக விளங்கினாலும், அவர்களை கைதுசெய்ய எனது அமைச்சு நடவடிக்கை எடுக்கும்,

விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளவாகளிற்கு அப்பால் மேலும் பல அரசியல்வாதிகள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னைய ஆட்சியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளை முன்னாள் ஜனாதிபதியே அதனைத் தடுத்தார்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவரை அவரது நீர்கொழும்பு வீட்டில் வைத்து அதிகாரிகள் கைது செய்ய முயன்ற வேளை அவரை காப்பாற்ற முன்னாள் ஜனாதிபதி ஹெலிக்கொப்டரை அனுப்பினார் எனத் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் புங்குடுதீவு கொலை வழக்கு

## உள்நோக்கம் குறித்து கண்டனம்

புங்குடுதீவு மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட சுவிஸ்குமார் என்ற சந்தேக நபரை கொழும்புக்கு தப்பிச்செல்ல பொலிஸ் உயரதிகாரி ஒருவர் இலஞ்சம் பெற்றமை தொடர்பில் இதுவரை எவரும் கவனம் செலுத்தவில்லை என சிரேஷ்ட சட்டத்தரணி ரத்தினவேல் கவலை வெளியிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காகவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சந்தேகம் வெளியிட்டார். இது குறித்து தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையை சாதாரண சட்டத்தின் கீழ் முன்னெடுக்க முடியும். எனினும் ஓர் உள்நோக்கத்துடனேயே பயங்கரவாதத் தடைச்சட்டம் இதில் உட்படுத்தப்பட்டிருக்கிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மரண தண்டனை இல்லை. ஆனால் ஆயுள் தண்டனை உள்ளது. அந்த வகையில் சந்தேக நபர்களை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றவே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. மேலும் இந்தச் சம்பவம் பயங்கரவாதச் சம்பவமும் இல்லை.

ஆகவே இதில் பலவிதமான வலைப்பின்னல் காணப்படுகின்றது. முதலாவது குற்றச்சாட்டு பொலிஸார் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள சுவிஸ்குமார் என்ற நபரை தடுப்பிலிருந்து விடுவிப்பதற்காக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் பெருந்தொகையான பணத்தை இலஞ்சமாகப் பெற்றுள்ளார் என்பதே அந்தக் குற்றச்சாட்டு. இது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம். இந்த நிலையில் குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனை விதிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற நிலையில் தேவையற்ற வகையில் பயங்கரவாத தடைச் சட்டம் இந்த வழக்கில் உட்புகுத்தப்பட்டுள்ளது என்றார்.

# உள்ளக விசாரணையும் பொறிமுறையும் பல் தரப்பு பேச்சும் வேண்டும்

## வலியுறுத்துகிறது ஐ.நா.

(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல் விசாரணைகள் தொடர்பில் அனைத்து தரப்பினரது கருத்துக்களையும் அரசாங்கம் கேட்டறிந்துகொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய தரப்பினருடன் விரிவாக பேசி விசாரணைகள் குறித்த தீர்மானங்களை எடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின், பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் ஹல் ஹுசெய்னும் இதேவிதமான கருத்தை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது மிகவும் அவசியமானது என பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களிடம் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல் தொடர்பில் வெளிப்படையானதும் நம்பகமானதுமான பக்கச்சார்பற்ற விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும், இலங்கையுடன் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# தமிழ் மக்களுக்கு புதிய தலைமை

■ சங்கர சிவன்

**எப்போதும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் தலைமையை நிராகரித்துப் புதிய தலைமையை நோக்கித் தமிழ் மக்கள் அணிதிரள் வேண்டும்.**

தமிழ் மக்களின் பிரச்சினைகள் காலத்துக்குக் காலம் அதிகரிக்கின்றனவேயொழியத் தீர்வுக்கான அறிகுறிகளைக் காணோம். பிரச்சினைகள் அதிகரிக்கின்றன வென்றால் அதன் அர்த்தம் மக்களின் துன்பங்கள் அதிகரிக்கின்றன என்பதே. ஆனால் தலைவர்களின் நிலை அதுவல்ல. எவ்வளவுக்கு மக்களின் பிரச்சினைகள் அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்குத் தலைவர்களின் அரசியல் பதவிகளுக்கு உத்தரவாதம் கிடைக்கின்றது. பிரச்சினைகள் பற்றி உணர்ச்சியூட்டும் விதத்தில் பேசி வாக்குகளை அள்ளலாம். ஆறு தசாப்தங்களுக்கு மேலாக எந்தப் பிரச்சினையும் தீராமலிருப்பதை இந்தக் கோணத்திலிருந்தே பார்க்க வேண்டும்.

இவ்வளவு காலமும் பிரச்சினை தீராமலிருப்பதற்கான காரணம் என்ன என்று கேட்கும் அளவுக்குப் பெரும்பாலான தமிழ் மக்கள் சுயமாகச் சிந்திக்கத் தொடங்கவில்லை. பிரச்சினைகள் பற்றித் தலைவர்கள் பேசுவதைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவர்களுக்குத் தங்கள் வாக்குகளை அளிப்பதோடு கடமை முடிந்தது என்று நினைக்கின்றார்கள். யாராவது காரணம் கேட்டால் தமிழ்த் தலைவர்கள் சிங்கள அரசியல்வாதிகளின் பக்கமும் தங்களுக்கு விரோதமான தமிழ் அரசியல்வாதிகள் பக்கமும் கைநீட்டுகின்றார்கள். தங்கள் பக்கத்தில் காரணத்தைத் தேடுவதில்லை. உண்மையான காரணம் தமிழ்த் தலைவர்களின் பக்கத்திலேயே இருக்கின்றது.

இனப் பிரச்சினைக்கான தீர்வில் தமிழ்த் தலைவர்களுக்கு அக்கறை இல்லை. தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்தாலும் அதைச் சரியான் முறையில் முன்னெடுக்கவில்லை. உண்மையான தலைமை பிரச்சினையின் தீர்வுக்கு நடைமுறைச் சாத்தியமான கோரிக்கையை முன்வைப்பதோடு நிற்காமல் அதை உரிய முறையில் முன்னெடுப்பதோடு நிற்காமல் அதை உரிய முறையில் முன்னெடுக்கவும் வேண்டும் தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்ததேயொழிய அதைப் பொருத்தமான முறையில் முன்னெடுக்கவில்லை. சரியான முறையில் தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டிருந்தால் சமஷ்டி சாத்தியமான தீர்வாக இருந்திருக்கும். சமஷ்டிக் கோரிக்கையின் மூலம் தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு அளித்த முக்கியத்துவத்தின் ஒரு பகுதியையாவது தமிழரசுத் தலைவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு அளிக்கவில்லை. சரியான நண்பர்களை இனங்காணத் தவறியதே இவர்கள் விட்ட பிரதானமான தவறு. இனப்பிரச்சினையின் தீர்வுக்கு விசுவாசமாகச் செயற்படக்கூடிய இடது சாரி மற்றும் முற்போக்கு சக்திகளை நிராகரித்து இனப்பிரச்சினையை வளர்ப்பதில் அக்கறை செலுத்திய முதலாளித்துவ சக்திகளுடன் நட்புறவை வளர்த்தார்கள். இடது சாரி மற்றும் முற்போக்கு சக்திகள் இவர்களை முதலாளித்துவ தாசர்களாகப் பார்க்கும் நிலையை இதன் மூலம் உருவாக்கினார்கள். சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த மாத்திரத்தில் நடைமுறைக்கு வரப் போவதில்லை. இக்கோரிக்கையின் பக்கம் சிங்கள மக்களை வென்றெடுப்பதற்கான எந்த முயற்சியையும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மேற்கொள்ளவில்லை. இதற்குப் பதிலாகச் சிங்கள மக்களிடம் சந்தேக விதைகளைத் தூவும் நடவடிக்கைகளையே இவர்கள் மேற்கொண்டார்கள். கச்சேரியடிச் சத்தியாக்கிரகத்தின் போது தமிழ்நாட்டுத் தபால் சேவை ஆரம்பித்ததும் தமிழ்நாட்டுக் காணிக் கச்சேரி நடத்தியதும் சமஷ்டிக் கோரிக்கைக்குப் பின்னால் தனிநாட்டு நோக்கமே இருக்கின்றது என்ற சந்தேகத்தை சிங்கள மக்களிடம் தோற்றுவித்தன. சில தலைவர்களின் மேடைப் பேச்சுக்கள் கூட இச் சந்தேகத்தை .வளர்ப்பனவாக இருந்தன. இக்காரணங்களாலேயே சமஷ்டிக் கோரிக்கை தோல்வி அடைந்தது.

தமிழரசுக் கட்சியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகியது. இந்தக் கூட்டணி வட்டுக்கோட்டையில் நிறைவேற்றிய தனிநாட்டுத் தீர்மானமும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு நிரந்தரமான தடைக்கல்லாகியது. ஒருபுறத்தில் தமிழ் மக்களின் உண்மையான இலக்கு தனிநாடு தான் என்ற அபிப்பிராயத்தைச் சிங்கள மக்களிடம் தோற்றுவித்தது. நியாயமான அரசியல் தீர்வுக் கோரிக்கையைச் சாதாரண சிங்கள மக்கள் ஏற்கத் தயங்கும் நிலையை இத்தீர்மானம் உருவாக்கியது. மறுபுறத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பிழையான தனிநாட்டு நம்பிக்கையை வளர்த்து நியாயமான அரசியல் தீர்வுப் பாதையிலிருந்து அவர்களை இத் தீர்மானம் திசைதிருப்பியது.

இந்தத் தீர்மானத்தைத் தமிழ்த் தலைவர்கள் ஏன் எடுத்தார்கள் என்பதற்குச் சரியான விளக்கம் கூற முடியாது. தனிநாடு எந்த விதத்திலும் சாத்தியமில்லை என்பது தெரிந்திருந்தும் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கின்றார்கள். சிங்கள மக்கள் சமஷ்டியை ஏற்காததால் இத்தீர்மானத்தை எடுத்ததாகக் கூறுவது சரியான காரணமாகாது. சமஷ்டியை ஏற்காத சிங்கள மக்கள் தனிநாட்டை ஏற்பார்களா? அரசியல் இருப்புக்கான சந்தர்ப்பவாத ஏற்பாடே வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது. தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்களே சொற்ப. காலத்துக்குள் அதைக் கைவிட்டதிலிருந்து இதை விளங்கிக் கொள்ளலாம்.

தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமற் போனதற்கான காரணங்களை மேலே பார்த்தோம் தமிழரசுக் கட்சி ஒரு தீர்வை முன் வைத்த போதிலும் அதைச் சரியான முறையில் முன்னெடுக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி நடைமுறைச் சாத்தியமற்ற தீர்வையே முன்வைத்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற அக்கறை தலைவர்களுக்கு இருக்கவில்லை.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னைய இரண்டு கட்சிகளினதும் வாரிசாகத் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குகின்றது. இதற்கும் முன்னைய இரண்டு கட்சிகளுக்குமிடையே அடிப்படையான ஒரு வேற்றுமையைக் காணலாம். முன்னைய இரண்டு கட்சிகளும் தீர்வுக் கோரிக்கைகளை முன்வைத்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெயருக்காகவாவது ஒரு தீர்வுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கோரிக்கை எதையும் முன்வைக்காமல் சம்பந்தன் ஆறு வருடங்களைக் கெட்டித்தனமாகக் கழித்துவிட்டார். இன்னும் இப்படியே காலத்தைக் கடத்துவது தான் கூட்டமைப்புத் தலைமையின் நோக்கம்.

**வட்டுக்கோட்டையில் நிறைவேற்றிய தனிநாட்டுத் தீர்மானமும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு நிரந்தரமான தடைக்கல்லாகியது. ஒருபுறத்தில் தமிழ் மக்களின் உண்மையான இலக்கு தனிநாடு தான் என்ற அபிப்பிராயத்தைச் சிங்கள மக்களிடம் தோற்றுவித்தது. நியாயமான அரசியல் தீர்வுக் கோரிக்கையைச் சாதாரண சிங்கள மக்கள் ஏற்கத் தயங்கும் நிலையை இத்தீர்மானம் உருவாக்கியது. மறுபுறத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பிழையான தனிநாட்டு நம்பிக்கையை வளர்த்து நியாயமான அரசியல் தீர்வுப் பாதையிலிருந்து அவர்களை இத் தீர்மானம் திசைதிருப்பியது.**

கூட்டமைப்புத் தலைமையைப் பொறுத்த வரையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு எது என்பதில் உடன்பாடு இல்லை. இது தான் உண்மையான நிலை. இந்த நிலையில் இவர்கள் எப்படி இனப்பிரச்சினையின் தீர்வை நோக்கிச் செயற்படப் போகிறார்கள்? கூட்டமைப்பின் அரசியல் எப்படியானதாக இருக்கும் என்பதை ஊகிப்பது சிரமமானதல்ல.

ஒவ்வொரு தேர்தலின் போதும் பிரச்சினைகளை எடுத்துக்காட்டி ஆவேசமாக முழங்குவார்கள். பிரச்சினைகளுக்குத் தங்களால் மாத்திரமே தீர்வைப் பெற்றுத்தர முடியும் என்பார்கள். தீர்வுக்காகப் போராடுவதற்காக மக்களாணை கேட்பார்கள். நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய பின் எல்லாம் மறந்துவிடுவார்கள். பேரினவாதம் தீர்வுக்குத் தடையாக இருக்கின்றது என்று சாட்டும் சொல்வார்கள். எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடையாது.


அடுத்த தேர்தலின் போது மீண்டும் பழைய கதை. மீண்டும் ஆவேசப் பேச்சு. மீண்டும் மக்களாணைக்கான கோரிக்கை. அறுபது வருடங்களுக்கு மேலாக இது தான் நடந்தது. இனியும் இது தான் நடக்கப் போகின்றது இது தமிழ் மக்களின் தலைவிதியா?

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் நடைமுறைச் சாத்தியமானதும் நியாயமானதுமான தீர்வுக்கோரிக்கை முக்கியமானது. அரசியல் தீர்வு முயற்சியில் சிங்கள மக்கள் முக்கிய பாத்திரம் வகிக்கின்றனர். சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறுவதற்குச் சிங்கள மக்களின் வாக்குகள் அவசியமானவை. இதை விளங்கிக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு சக்திகளுடன் பேச்சுவார்த்தை நடத்திச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இந்த முயற்சியில் திருப்தியான பலன் ஏற்படும் பட்சத்தில் அரசியல் தீர்வுக் கோரிக்கையைக் கூட்டுக் கோரிக்கையாக முன்வைக்கலாம். அப்போது அரசாங்கத்தினால் அதைத் தட்டிக்கழிக்க முடியாது.

அரசியல் தீர்வை அடைவதற்கு இதுதான் சரியான வழி. அரசாங்கம் தீர்வை முன்வைக்கும் என்பதும் சர்வதேசம் தீர்வைப் பெற்றுத்தரும் என்பதும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான கற்பனைக் கதைகள். இந்த வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் கூட்டமைப்பு தயாராக இல்லையென்றால் இந்த வழியில் பிரச்சினையைத் தீர்க்கும் வேலைத்திட்டத்தைக் கொண்டுள்ள தலைமையின் பக்கம் மக்கள் திரும்ப வேண்டும். எப்போதும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் தலைமையை நிராகரித்துப் புதிய தலைமையை நோக்கித் தமிழ் மக்கள் அணிதிரளவேண்டும். ●

# மும்முனைப் போட்டி தெற்கில்







(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகிய மூவரும் மும்முனைப் போட்டியாக களமிறங்கவுள்ளனர்.

இந்தத் தகவலை சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வையும் இணங்க வைப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் முயற்சிகள் தோல்வியில் அடைந்திருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன் காரணமாக மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தரப்பினராக தேர்தலில் போட்டியிட தீர்மானித்திருப்பதாகவும் அந்த செய்தி யில் கூறப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகிந்த தேசப்பிரியவே தொடர்ந்தும் பணியில்



(கொழும்பு)

அரசாங்க பதவி வகிப்பவர்கள் 60 வயதை அடைந்ததும் ஓய்வு பெற வேண்டும் என்பது சட்டம். இந்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளார். ஆனால் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளராக இன்னொருவர் நியமிக்கப்படும் வரை அவர் ஓய்வு பெறமுடியாது. இந்நிலையில் ஆணைக்குழு இன்னொரு தேர்தல்கள் ஆணையாளரை நியமிக்கும் வரை மகிந்த தேசப்பிரியவே தேர்தல்கள் ஆணையாளராக இருப்பார். இந்நிலையில் மகிந்த தேசப் பிரியவின் வழிகாட்டலிலேயே இம்முறை பொதுத் தேர்தல் இடம் பெறும் எனக் கூறப்படுகின்றது.

# மலையகக் கட்சிகள் ரணில் பக்கம்

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை இலக்காகக் கொண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிக் கட்சியில் இணைந்து போட்டியிட மூன்று தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

சாந்தனி சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி மற்றும் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய தமிழர்கள் வாழும் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம் மற்றும சப்ரகமுவ மாகாணம் ஆகிய பகுதிகளில் பொதுத் தேர்தலில் போட்டியிட குறித்த கட்சிகள் தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நல்லாட்சியின் மொத்த அறுவடை சிங்கள சமூகத்தில் பிளவு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தில் பெரும்பான்மை சிங்கள சமூகம் பல பிரிவுகளாக பிரிந்துள்ளதாக பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்திலும் இந்நிலைமை காணப்பட்டதுதான். இருப்பினும் தற்பொழுது இது அதிகரித்துள்ளது.

பிரதான இனமான சிங்கள இனம் தொடர்ந்தும் நெருக்கடிக்குள்ளாக்கும் அரசியலொன்று நாட்டுக்குள் உள்ளதாகவும் இந்த நிலைமையை விரைவில் மாற்றியமைக்க வேண்டும் எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்குத் தீர்வாக தமது அமைப்பு பொது ஜன பெரமுன எனும் பெயரில் அரசியலில் பிரவேசித்து, சிங்கள இனத்தை ஐக்கியப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும் தேரர் குறிப்பிட்டார்.

20 ஆவது திருத்தச் சட்ட மூலம் சிறு கட்சிகளுக்கு பாதிப்பாக இருந்தாலும், நாட்டுக்கு நலனுள்ள ஒன்றாகும் எனவும் தேரர் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் கவனயீர்ப்பு போர்

காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வுக்கு ஆட்சேபம் தெரிவித்து காணாமற் போகச் செய்யப்பட்டோரின் உறவுகள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட பெருமளவானோர் கலந்து கொண்டனர். இதன்போது, ஜனாதிபதி ஆணைக்குழுவில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை, சர்வதேச தரத்திலான விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக் கைகளை முன்வைத்து போராட்டத்தில் உறவுகள் ஈடுபட்டனர். அமர்வுக்கென அழைக்கப்பட்ட சிலர் மட்டுமே பிரதேச செயலகத்துக்குள் சென்றனர். ஏனையவர்கள் வெளியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. காலை 9 மணிக்கு ஆரம் பமான போராட்டம் 11.30 மணிவரை முன்னெடுக்கப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# உயர்தரப்பரீட்சை தள்ளிப்போகும் வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை பிற்போடப்படலாம் என அறி விக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் 17ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் பரீட்சைகளை பிற்போடு தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆசிரியர்கள், மற்றும் அதிகாரி களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறும் திகதி குறித்து முடிவு எடுக்கப்படும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

# எட்டுப்பேர் அடங்கிய குழு நியமித்தார் மைத்திரி

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் பொருட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் தொடர்புடைய கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் நோக்கில் எட்டுப் பேர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நியமித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோருடன் நேற்று ஜனாதிபதி மேற் கொண்ட விசேட கலந்துரையாடலின் போது இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, சரத் அமுனுகம, ரெஜினோல்ட் குரே, மகிந்த சமரசிங்க, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, மகிந்த அமரவீர மற்றும் திலங்க சுமதிபால ஆகி யோர் உறுப்பினர்களாவர். இக்குழு நாளை மறு தினம் முதல் தடவையாக கூடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

# சிறைக்கைதி தப்பியோட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிறைக்கைதி ஒருவர் நேற்று சனிக்கிழமை அதிகாலை தப்பியோடியுள்ளதாக மட்டக்களப்பு சிறைச்சாலை தகவல் வெளியிட்டுள்ளது.

கண்டியைப் பிறப்பிடமாகவும் கேகாலையை வசிப்பிடமாகவும் கொண்ட டொம் ஒஸின் எனப்படும் இக் கைதி கடந்த 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

56 குற்றச்சாட்டுக்களுக்காக 46 வருடங்களும் ஒரு மாதமும் இக்கைதிக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கடந்த ஆண்டின் வாக்காளர் இடாப்பே இந்த முறையும்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்திய 2014 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய அறிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் கூறினார்

# உயர்வான இலட்சியங்களையும் மானுட மேன்மையையும் கூறுவதில் தமிழுக்கு ஈடில்லை

## - வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெருமிதம் -

தற்காலத்தில் உலகில் பல்லாயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் எட்டு மொழிகளுக்கு மாத்திரமே செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அதில் தமிழ்மொழியும் ஒன்றாக விளங்குவது தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டிய விடயம். உயர்ந்த இலக்கியங்களையும், உயர்வான இலட்சியங்களையும்,மானிட மேன்மையைப் பறைசாற்றும் நூல்களையுமுடைய எங்களுடைய தமிழ் மொழிக்கு ஈடு இணை ஏதுமில்லை. இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்தார்

யாழ்.திருநெல்வேலி முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தின் முத்தமிழ் விழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போது பிரதமவிருந் தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழை இயல், இசை, நாடகம் என முத்தமிழாக எங்கள் முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள். ஒரு பாடலையே இயலாகவும், இசையாகவும், நாடகமாகவும் உருவாக்கக் கூடிய சிறப்பு எமது மொழிக்குண்டு. பண்டைக்காலம் தொட்டுப் பட்டி தொட்டி எங்கும் முழங்கி வருகின்ற எம் மொழியின் பெருமையை நாம் உணர வேண்டும் ஔவையார் விநாயகப் பெருமானிடம் சென்று வியாபார ஒப்பந்தம் போன்றதொரு ஒப்பந்தம் செய்கிறார்.எம் பெருமானே எனக்கொரு வரம் வேண்டும் எனக் கேட்கிறார். பாலும் தெளி தேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்து உனக்குத் தருவேன். நான் உன்னிடம் கேட்பது என்னவெனில் சங்கத்தமிழ் மூன்றும் தா எனக் கேட்கிறார். நாங்கள் இறைவனுக்கு வழக்கமாகக் கொடுப்பதைவிட பல மடங்கு அதிகமாகத் தான் பலனை எதிர்பார்ப்போம். படையல் செய்யாமலோ அல்லது காணிக்கை செலுத்தாமலோ பல வரங்களைக் கேட்போம. ஆனால் ஔவையாருக்குப் பால், தேன், பாகு,பருப்பு இவை நான்கையும் விட சங்கத்தமிழ் உயர்வானது எனத் தெரியும். அதனால் தான் ஔவையார் விநாயகப் பெருமானிடம் மேற்கண்டவாறு வரங்கள் கேட்கிறார்.1993 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை முத்துத் தம்பி மகாவித்தியாலயத்துடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. அதன்பின்னர் பிறநாடுகளுக்குக் கல்விப் பணிக்குச் செல்ல வேண்டிய தேவையேற்பட்டது.

அவ்வாறு செல்லும் போதெல்லாம் இங்கு நாம் கல்வி கற்பித்த சிறார்களை அங்கு சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர்களைக் காணும் போதெல்லாம் அவர்களிடம் காணப்பட்ட மனித விழுமியங்கள், பண்பாடு போன்றன எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. இன்னும் நல் மாணாக்கர்களை உருவாக்க வேண்டுமென்ற ஆசைதான் மனதில் எழுகிறது.அதற்கு எங்களின் வயது தான் இடம் கொடுக்கவில்லை. ஆனால் இந்தப் பணிகளை எமது ஆசி ரியர்கள் முன்னெடுத்துச் செல் வார்கள் என்கிற நம்பிக்கை யுள்ளது.

இவ்வாறான முத்தமிழ் விழா



மாணவர்களின் திறன்களை வெளிக் கொணர்வதற்கான நல்லதொரு களமாக அமைந்துள்ளது. அனைத்துப் பாடசாலைகளும் முத்தமிழுக்கு விழா வெடுக்க வேண்டும் என வும் வலியுறுத்திக் கூறினார்.

இதன் போது தரம்-9,10,11 மாணவர்களின் காத்தவராயன் கூத்து, தரம் - 8,9 மாணவர்களின் நாட்டுப்புறப் பாடல், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் காவடி நடனம், கிருஷ்ணர் ராதை நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன

# தெல்லிப்பளை இந்துஇளைஞர் சங்கத்தின் பொன்விழா




யாழ். தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத்தின் பொன் விழா நிகழ்வு நேற்றும் இன்றும் துர்க்காதேவி தேவஸ்தான முன்றலில் நடை பெறுகின்றது.

இந்து இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் நிகழ்வின் முதலாம் நாள் அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர் அ.நடராஜனும், சிறப்பு விருந்தினர்களாக துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தாசபை தலைவரும், வட மாகாணசபை உறுப்பினரு மாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ். பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேச செயலர் சிறீமோகன், வலி. வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன், தெல்லிப்பளை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

நேற்று சனிக்கிழமை மாலை 2.30மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வுகளில் நாட்டியாஞ்சலி, சிவதாண்டவம், நாட்டிய நாடகம், வில்லுப் பாட்டு, இசைக்கச்சேரி, பட்டி மன்றம் ஆகிய கலை நிகழ் வுகளும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது

# போதை எதிர்ப்புப் பேரணி

(கோண்டாவில்)

சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த கோண்டாவில் இந்துக்கல்லூரி, கோண டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், கோண்டாவில் சி.சி வித்தியாலய மாணவர்கள் இணைந்து நடத்திய போதைப்பொருள் எதிர்ப்பு ஊர்வலம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலய முன்றலில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமான இவ் ஊர்வலம் பலாலி வீதி வழியாக கோண டாவில் இந்துக்கல்லூரியை அடைந்து அங்கு கோண்டாவில இந்துக் கல்லூரி மாணவர்கள் பங்கு பற்றிய தெருக்கூத்து நிகழ்வொன்றும் இடம் பெற்றது.

ஊர்வலம் தொடர்ந்து K.K.S வீதி வழியாக கொக்குவில் சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதி, பொற்பதி வீதி ஊடாகச் சென்று முற்பகல் 11.30 மணிக்கு நிறைவடைந்தது

இந்நிகழ்வில் மூன்று பாடசாலைகளையும் சேர்ந்த 500 இற்கும் அதிகமான மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர் (10)

◆ ◆ ◆ ◆



பன்னாட்டு போதைப் பொருள் ஒழிப்பு தினமாகிய நேற்றுமுன் தினம் அது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் பெருந்திரளான மாணவர்கள் கலந்து கொண்ட கவனயீர்ப்புப்பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுளளது. செம்மலை மகாவித்தியாலத்திற்கு முன்பாக நடைபெற்ற இப் பேரணியில் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கருத்துரையினை வழங்கியிருந்தார்.

இது தொடர்பில் மேலும் அறியவருகையில்,

முல்லைத்தீவு கல்வி வலயத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட பன்னாட்டு போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டதான கவனயீர்ப்புப்பேரணிகளில் ஒன்று முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்திற்கு முன்பாக நேற்றுமுன் தினம் காலை நடைபெற்றது. முல்லை. செம்மலை மகாவித்தியாலயம், கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை, அளம்பில் றோ.க. வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு போதைப்பொருள ஒழிப்பு பதாகைகளை தாங்கியும் போதைப் பொருள் ஒழிப்பு வாசகங்களை ஒருமித்து ஒலித்தும் தமது கவனயீர்ப்பு நடவடிக்கைகளை தொடர்ந்திருந்தனர்.

பாடசாலையின் ஆசிரியர்கள், அதிபர் மற்றும் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்து கொண்ட இக்கவனயீர்ப்புப் பேரணியானது ஏறத்தாழ அரை மணி நேரம் சாலை மறித்து தமது விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியிருந்தனர்.

பேரணி நிறைவில் முல்லை. செம்மலை மகாவித்தியாலய முன்றலில் ஒன்று சேர்ந்த மாணவர்களின் முன்னர் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் கலந்து கொண்டிருந்த வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் செம்மலை பாடசாலை அதிபர் விஜயரத்தினம் ஆகியோர் விழிப்புணர்வுரைகளை ஆற்றி மாணவர்களின் கவனயீர்ப்பு நடவடிக்கையை நிறைவு செய்திருந்தனர். (160)

# யுவதி துஷ்பிரயோகம்; இளைஞர் கைது

குடத்தனை மத்தியில் 20வயது யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிபதி.மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த இளைஞன் நள்ளிரவு 12 மணியளவில் தனது வீட்டிற்கு வந்து தந்தையை கொலை செய்து விடுவேன் என மிரட்டியே தன்னை துஷ்பிரயோகம் செய்ததாகவும் இதனால் தான், கர்ப்பமடைந்துள்ளதாகவும் யுவதியிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளார். (18)

## முரசின் இன்றைய பலன்

(28.06.2015 ஞாயிற்றுக்கிழமை)

மன்மத வருஷம் ஆனி மாதம் 13 ஆம் திகதி.
ஏகாதசி திதி. மரணயோகம்
விசாக நட்சத்திரம் பி.இ 03.15 வரை. பின் அனுசம்.
இராகுகாலம் 04.25-05.55 வரை சுபநேரம் 08.55-10.25 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: வழுக்கல் / சறுக்கலினால் தேக உறுப்புக்கள் பாதிக்கப்படல்

**ரிஷபம்**: தற்காலிகப் பணியைக் கைவிட்டு வெளியூர் செல்ல முயற்சித்தல்

**மிதுனம்**: பாதுகாப்பில் அலட்சியப்போக்கு இருந்தமையினால் விவசாயப் பயிர்கள் அழிவுறல்.

**கடகம்**: விற்பனை விலைகளைக் காட் சிப்படுத்தாமையினால் எச்சரிக்கை செய்யப்படல்

**சிம்மம்**: வீதியில் பயணித்த வேளை கையடக்கத் தொலை, பேசிப்பாவனை விபத்தினைத் தந்து விடல்

**மீனம்**: சட்டவிரோதமாக குடியேறியவரை எழுப்பி விட காவல் நிலையம் செல்லல்

**கன்னி**: ஐரோப்பிய நாடுகளில் எல்லைகளைக் கடக்க முற்பட்ட வேளை பிழைபடாது சமயோசிதமாக தப்பி விடல்

**கும்பம்**: வங்கி வைப்புப்பணத்தில் சந்தேகம் ஏற்பட்டதால் மீளாய்வு செய்ய முற்படல்

**மகரம்**: லீசிங் - வாகனம் பறிமுதலாகலாம் என்ற அச்சநிலை தக்கவைத்தல்

**தனுசு**: தம்பதியர் மத்தியில் ஏற்பட்ட சந்தேகக்கோடு சந்தேகக் கேட்டினை ஏற்படுத்தல்

**விருச்சிகம்**: காதலில் வீசிய புயல் தணிந்து கவின் நிலை தக்க வைத்தல்

**துலாம்**: முகம்பார்த்துக் கதைப்பதினால் மனஇறுக்கம் அகன்று விடல்

# பெண்கள் உலகக் கிண்ண கால்பந்து அரையிறுதிக்கு முன்னேறியது ஜேர்மனி



பெண்கள் உலகக் கோப்பை கால்பந்துத் தொடரின் அரையிறுதிக்கு ஜேர்மனி அணி முன்னேறியது. பரபரப்பான காலிறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியை ஜேர்மனி தண்டஉதை மூலம் வீழ்த்தியது.

சர்வதேசகால்பந்துசம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் பெண்களுக்கான 7ஆவது உலகக் கோப்பை கால்பந்து தொடர் கனடாவில் நடைபெற்று வருகின்றது. மான்ட்ரியலில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் காலிறுதிப் போட்டியில் ஜேர்மனி, பிரான்ஸ் அணிகள் மோதின. முதல் பாதியில் இரு அணி வீராங்கனைகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இரண்டாவதுபாதியின் 64ஆவது நிமிடத்தில் லூசியா ஒரு கோல் அடித்தார். இதற்கு ஜேர்மனி அணியின் சசிக் (84ஆவது நிமிடம்) பெனால்டி கிக் வாய்ப்பில் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். இதன் பின் கூடுதல் நேரத்திலும், இரு அணியினரும் கூடுதலாக கோல் அடிக்கவில்லை. இதனால் போட்டி 1-1 என சமநிலையானது. இதனையடுத்து தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் இரு அணிகளுக்கும் தலா 5 வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன் முதல் 4 வாய்ப்பிலும் இரு அணி வீராங்கனைகளும் கோல் அடித்தனர். 5ஆவது வாய்ப்பில் ஜேர்மனியின் சசிக் கோல் அடித்தார். ஆனால் பிரான்ஸின் கிளா-ரே அடித்த பந்தை ஜேர்மனி கோல் காப்பாளர் நடினா அசத்தலாக தடுத்தார். இதன் மூலம் ஜேர்மனி அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

மற்றொரு காலிறுதியில் அமெரிக்கா அணி 1-0 என சீனாவை தோற்கடித்து, அரையிறுதிக்கு முன்னேறியது.



## அசத்தியது ஆர்ஜென்ரீனா

(வினா டெல்)

கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு ஆர்ஜென்ரீன அணி முன்னேறியது.

தென் அமெரிக்க நாடுகள் பங்கேற்கும் 44ஆவது கோபா அமெரிக்க கால்பந்து தொடர் சிலியில் நடைபெற்று வருகின்றது. வினா டெல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா, கொலம்பியா அணிகள் மோதின.

இரு அணி வீரர்களும் முதல் பாதியில் ஒரு கோல் கூட அடிக்கவில்லை. இரண்டாவது பாதியிலும் இரு அணியினரும் சம பலத்தை வெளிப்படுத்த, ஒரு கோல் கூட அடிக்கவில்லை. கூடுதல் நேரத்திலும் கோல் அடிக்காததால், வெற்றியை தீர்மானிக்க போட்டி பெனால்டி ஷூட்அவுட் முறைக்கு சென்றது. இதில் அசத்திய ஆர்ஜென்ரீன அணி 5-4 என கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

## மெக்கலம் விலகல்



சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் தொடர்களில் இருந்து நியூசிலாந்து அணியின் கப்டன் மெக்கலம் விலகியுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரிற்குப் பின்னர் நியூசிலாந்து அணி தொடர்ச்சியாக விளையாடி வருவதால் களைப்படைந்துள்ள மெக்கலம் மேற்கண்ட தொடர்களில் இருந்து விலகியிருக்கிறார்.

மெக்கலம் ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறலாம் என தகவல் வெளியாகியிருந்தது. அது தொடர்பாக பல்வேறு ஊகங்கள் கிளம்பின.

ஆனால் இப்போது மெக்கலம் அடுத்த ஆண்டு மார்ச், ஏப்ரலில் நடைபெறவுள்ள ருவென்ரி-20 உலகக் கோப்பை வரை நியூசிலாந்துக அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்துள்ளார்.

## டோனிக்கு அப்ரிடி ஆதரவு

பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை இழந்தபின், இந்திய கப்டன் டோனி மீதான விமர்சனங்கள் வருத்தம் தருகிறது. டோனியின் சாதனையை எப்போதும் மறக்கக்கூடாது என, பாகிஸ்தான் அணியின் அதிரடி வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் ஒரு நாள் தொடரை இந்திய அணி இழந்தது. இதன்பின் கப்டன் டோனி மீது வைக்கப்படும் விமர்னங்கள் வருத்தம் தருவதாக உள்ளது. ஒரு தோல்வி அடைந்தவுடன் ஹீரோக்களுக்கு நெருக்கடி கொடுப்பது, இந்திய துணைக்கண்டத்தில் நிலவும் மோசமான கலாசாரம்.

ஒரு வீரரை தற்போதைய செயற்பாட்டை வைத்து விமர்சிப்பது தவறு எனக் கூறவில்லை. அதேநேரம் அவர்களின் கடந்த கால சாதனையை மறக்கக்கூடாது. டோனியை எடுத்துக்கொண்டால் இந்திய அணிக்கு கிடைத்த வியக்கத்தக்க வீரராவார். இவரின் சாதனையே, டோனியை பற்றி முழுவதுமாக தெரிவிக்கும்.

பலமான இந்திய அணியை டோனியால் உருவாக்க முடியும். திறமையான துடுப்பாட்ட வரிசையை ஏற்படுத்துவார். பாகிஸ்தானில் உள்ளூர் போட்டிகளின் கட்டமைப்பு மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிக இளம் வீரர்கள் தேசிய அணிக்காக இடம்பெறுவர். ஒரு நாள் போட்டியில் 398 போட்டிகளில் விளையாடி ஓய்வு பெற்றேன். இதற்காக



400 போட்டியில் பங்கேற்க முடியாத வருத்தம் எல்லாம் இல்லை.

ருவென்ரி-20 போட்டிகளில் கலந்து கொள்வதே மகிழ்ச்சிதான். அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை ருவென்டி-20 தொடரில் பங்கேற்க வேண்டும். கரீபியன் பிரிமியர், பிக்போஷ் தொடரில் விளையாடி வருகிறேன். இதில் தலை சிறந்த வீரர்களுடன் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தலைமைப் பொறுப்பிலிருந்து டோனி விலக வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விம்பிள்டன் ரென்னிஸ் நாளை ஆரம்பம்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டனில் நாளை ஆரம்பமாகவுள்ளது. இதில் யார் யாருடன் மோதுவ்து என்பது குலுக்கலில் முடிவு செய்யப்பட்டது. இதன்படி ஆண்கள் பிரிவில் முதல் நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச், ஜேர்மனியின்பிலிப்கோல்ஸ்கிரீபரையும், முன்னாள் சம்பியன் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், டொமிர் ஜூம்ஹரையும் (போஸ்னியா) சந்திக்கிறார்கள்.

பெண்கள் பிரிவில் முதல் நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் முதல் சுற்றில் தகுதி நிலை வீராங்கனை ரஷ்யாவின் மார்கரிதா காஸ்பரியனுடன் மோதுகிறார். அவர் அரையிறுதியில் ரஷ்யாவின் ஷரபோவாவுடன் மல்லுக்கட்ட வேண்டிவரலாம்.

இந்த முறை கிண்ணத்தை வெல்வேன் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என ஷரபோவா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆஷஸில் கலக்குவோம்

(லண்டன்)

ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலிய அணியை வீழ்த்தி கிண்ணத்தை வெல்வோம். சிறந்த பந்து வீச்சு, துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டுள்ள எங்களுக்கு உள்ளூரில் போட்டிகள் நடைபெறுவது மேலதிக பலமாகவே அமையும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என இங்கிலாந்து டெஸ்ட் அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி. அதிருப்தி

இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுவின் நியமனம், சர்வதேச கிரிக்கெட் சபையின் யாப்பிற்கு முரணானது என சர்வதேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது.

பார்படோசில் நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தின் போதே சர்வதேச கிரிக்கெட் பேரவை இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில், சர்வதேச கிரிக்கெட் சபையின் பொதுக் கூட்டத்திற்கு முன்னர் சுதந்திரமானதும் நீதியானதுமான கிரிக்கெட் தேர்வை நடாத்துமாறு இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சரிடம் சர்வதேச கிரிக்கெட்

## சமவாய்ப்பு வழங்க விதியில் மாற்றம்

### ஐ.சி.சி. அதிரடி நடவடிக்கை

(டுபாய்)

துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கத்தை குறைக்கும் வகையிலும் பந்து வீச்சாளர்களைக் காக்கும் பொருட்டும் ஒரு நாள் போட்டி மற்றும் ருவென்ரி-20 ஓவர் போட்டி விதிமுறைகளில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அதிரடி மாற்றம் செய்துள்ளது.

டுபாயின் பர்படாசில் நேற்று முன்தினம் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) ஆண்டு இறுதி பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கிரிக்கெட் போட்டியில் சில முக்கிய விதிமுறைகளை மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதில் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் முக்கியமாக 3 விதிமுறைகள் மாற்றம் கண்டுள்ளது. முக்கியமாக துடுப்பாட்ட பவர் பிளே இரத்து செய்யப்பட்டுள்ளது. ஒருநாள் போட்டிகளில் 15 மற்றும் 40ஆவது ஓவர்களில் இதுவரை துடுப்பாட்ட பவர் பிளே இருந்து வந்தது.

[illegible] 10 ஓவர்களில் 30 அடி யார் வட்டத்திற்கு வெளியே 5 களத்தடுப்பாளர்கள் நிறுத்தலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் .41 முதல் 50 ஓவர்கள் வரை 4 களத்தடுப்பாளர்களே நிறுத்தப்பட்டு வந்தனர். மேலும் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இனி எல்லா நோபோல்களுக்கும் பிரி ஹிட்டாக ஆடுவதற்கும் விதிமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. யூலை 5ஆம் திகதி முதல் இந்த விதிமுறைகள் அமுலுக்கு வருவதாக சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய மாற்றங்கள் பற்றி ஐ.சி.சி. தலைமை நிர்வாகி டேவிட் ரிச்சர்ட்சன் கூறுகையில் துடுப்பாட்ட வீரர்களுக்கும் பந்துவீச்சாளர்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்கும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.அதேசமயம் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் தாக்குதல், ஆக்ரோஷம் மற்றும் பரபரப்பு ஆகியவற்றை தக்கவைக்கும்



படியாகவும் இந்த மாற்றங்கள் இருக்கும் எனத் தெரிவித்தார்.

இந்த மாற்றம் நிச்சயம் சிறந்த வீரர்களை உருவாக்க வழிவகுக்கும் என கிரிக்கெட் விமர்சகர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## வேலணைப் பிரதேச மட்ட விளையாட்டு விழா

# மகுடம் சூடியது புங்குடுதீவு சண்ஸ்ரார்

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழாவின் வெற்றிக் கிண்ணத்தை புங்குடுதீவு சண்ஸ்ரார் அணி கைப்பற்றிக் கொண்டது.


வேலணைப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட பல அணிகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தின. இறுதி நாளன்று கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் மற்றும் தடகளம் போன்ற போட்டிகள் நடைபெற்றன.

கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணியும் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டதால் ஆட்டம் பரபரப்பான நிலையை அடைந்ததுடன் பார்வையாளர்களையும் பரவசப்படுத்தியது. இறுதியில் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 65 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் 34 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் 24 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இதில் சிறந்த கள வீரராக மண்டைதீவு சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அன்ரனி அலெக்ஸ்,



சிறந்த தட வீரராக மண்டைதீவு சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அன்ரனி அலெக்ஸ், சிறந்த கள வீராங்கனையாக அல்லைப்பிட்டி சென். பீலிப்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மேரி எறேமி, சிறந்த தட வீராங்கனையாக அல்லைப்பிட்டி சிறிமுருகன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மேரி மெற்றில்டா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, இப்போட்டி நிறைவின்போது உத்தியோகத்தர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. குறிப்பாக, கயிறு இழுத்தல் போட்டி இரசிகர்களுக்கு பெரு விருந்தாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வேலணைப் பிரதேச செயலர் மஞ்சுளா தேவி ச்தீஸன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் வேதநாயகன், மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ், விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டுக்கழகத் தலைவர், செயலாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (21)











# இறுதியில் மானிப்பாய் ஏஞ்சல், யாழ். மத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்தும் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்படும் இப்போட்டித் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே சமபலம் கொண்ட அணியாக முட்டி மோதிக் கொண்டதால் இப்போட்டி மிகுந்த பரபரப்பான நிலையை அடைந்தது. இறுதிப் பகுதி ஆட்டத்தில் நிதானமாகச் செயற்பட்ட மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை அணி 35-33 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின. யாழ். மத்திய கல்லூரி அணி ஆரம்பம் முதலே புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி செயற்பட்டபோதிலும் யாழ். மத்திய கல்லூரியின் சிறப்பான செயற்பாட்டினால்முறியடிக்கப்பட்டது. நிறைவில் யாழ். மத்திய கல்லூரி அணி 37-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. தொடர்ந்து ஏனைய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெற்று வருவதாகவும், அனைத்து வயதுப் பிரிவு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி ஒரே நாளில் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)




# மனோகரா, அன்ரனீஸ் முன்னேற்றம்

கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாவட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் இரண்டாவது சுற்றில் பாசையூர் சென். அன்ரனீஸ் மற்றும் மனோகரா அணிகள் முன்னேறியுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் இரு போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் விண்மீன் அணியும் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இதில் சென். அன்ரனீஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் மனோகரா அணியும் வேலணை துறையூர் ஐயனார் அணியும் மோதின. இதில் தண்ட உதை மூலம் 9-8 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வெற்றிபெற்றது. (93)





யாழ்ப்பாணத்திற்கான விசேட விஜயத்தை நேற்று முன்தினம் மேற்கொண்ட இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் அனுரா டி சில்வா அரியாலையில் அமையப் பெற்ற கால்பந்து பயிற்சி மைதானத்தைப் பார்வையிட்டபோது...

# விக்கி - மாவை மோதல்

— புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டு அரசியல் என்பது அறிக்கை மற்றும் தேர்தல் கால ஆர்ப்பரிப்புக்கள் என்கிற நிலைகளிலிருந்து அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கான அறிகுறிகளை காட்டுவதாக இல்லை. மாறாக, தேர்தல் அரசியலின் அழுக்கான பக்கங்களையும் பதவி நோக்கிய சதிராட்டத்தையும் அப்பட்டமாகக் காட்டத் தொடங்கியிருக்கின்றது.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரான சிறிய ஜனநாயக இடைவெளியை(!) அல்லது அப்படியான தோற்றப்பாட்டை, தமிழ் அரசியல் சூழலில் பெருமளவான வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்புக்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இல்லை.

அதுபோல, மக்களின் அரசியல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்து ஆர்வம் கொள்வதில்லை. மாறாக, மக்களை வாக்களிக்கும் கருவிகளாக மட்டுமே கையாள்கின்றது.

இவ்வாறான நிலைகள் தொடர்ச்சியான பின்னடைவையே தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்படுத்தி வருகின்றன. அரசியல் - இராஜதந்திர நிலைப்பாடுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் விளக்கமளிப்பது குறைவு. பல நேரங்களில் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் கூட அது நிகழ்த்தப்படுவதில்லை.

மைத்திரியின் ஆட்சி அரங்கேற்றப்பட்டு சில மாதங்களே ஆகின்ற போதிலும், அந்தக் காலத்துக்குள்ளேயே பலமான உள் உடைவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டது.

அந்த உள் உடைவுகள் ஏற்கெனவே இருந்த ஒன்றுதான், பொது எதிரியாக மகிந்த ராஜபக்ஷ இருந்த வரை அது அவ்வளவு வெளிக்காட்டப்படவில்லை அல்லது மக்களின் பார்வைக்கு வரவில்லை என்றும் கொள்ள முடியும். ஆனால், இப்போதுள்ள இடைவெளி அவற்றை இருக்கின்ற அளவைத் தாண்டியும் பெருப்பித்துக் காட்டச் செய்கின்றன.

இப்படியான நிலையில்தான், எதிர்வரும் பொதுத் தேர்தலை நோக்காகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை கூட்டி, பங்காளிக் கட்சிகளுக்கிடையில் வேட்பாளர்களை பங்கிடுவது தொடர்பில் ஆராய்கின்றது. முக்கிய அரசியல்- இராஜதந்திர விடயங்களை கையாள்வதற்காக அவ்வளவாக கூட்டப்படாத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அல்லது பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டங்கள் தேர்தல் என்றதும் எந்தவித கால தாமதமுமின்றி கூட்டப்படுகின்றன.

இன்னொரு பக்கம் எந்தவித தார்மிகமும் இன்றி, ஒருவர் மீது மற்றவர் சேறுபூசும் அரசியலை கூச்சமின்றி முன்னெடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கிடையில் கடந்த நாட்களாக இடம்பெற்று வருகின்ற கருத்து மோதல், ஊடகங்களினால் அதிகம் முன்னிறுத்தப்படுகின்றது. உட்கட்சி அரசியல் பிணக்குகள் என்கிற நிலையில் இருந்து அது, அடுத்த கட்டம் நோக்கி நகர்த்தப்படுவதற்கான காட்சிகளின் பிரதிபலிப்பையும் காட்டுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான அண்மைய சந்திப்பொன்றின் போது "வடமாகாண சபையை கருத்திற் கொள்ளாமல் கொழும்பு (மத்திய அரசாங்கம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து நேரடியாக பணம் வழங்குகின்றது. இது, கட்சியையும் வடமாகாண சபையையும் புறந்தள்ளும் நடவடிக்கையாக பார்க்கப்பட வேண்டியது" என்கிற தொனியிலான கருத்தை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

குறித்த விடயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே கூட வடக்கு மாகாண சபையை கருத்தில் கொள்வதில்லை என்கிற நிலைப்பாட்டை மக்களிடம் கொண்டு சேர்க்க பெருமளவு காரணமானது. முதலமைச்சரின் குறித்த கருத்து மாவை சேனாதிராஜாவை மறைமுகமாக குற்றஞ்சாட்டியிருந்ததாக மும் கொள்ளப்பட்டது. இதனையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் என்கிற ரீதியில் மாவை சேனாதிராஜா, முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் விளக்கமளிக்க கோரியிருந்தார்.

இரா.சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை வழிநடத்துவது யார்? என்கிற கேள்வி காலத்தினால் முக்கியத்துவம் பெறுகின்றது.

சிரேஷ்ட அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்து வத்துக்கான போட்டி நிலையில், மாவை சேனாதிராஜா முன்னிலையில் இருக்கின்றார். ஆனால், அவருக்கு பெரும் போட்டியாளராக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருதப்படுகின்றார். வட மாகாண சபைத் தேர்தலில் மாவை சேனாதிராஜாவைத் தாண்டி சி.வி.விக்னேஸ்வரன் முன்னிறுத்தப்பட்டது கருத்தில் கொள்ள வேண்டியது.


அப்படிப்பட்ட அரசியல் நிலை இப்போது இல்லை என்கிற போதிலும், வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் மாவை சேனாதிராஜாவுக்கு ஆதரவாக இருந்த சில தரப்புக்கள், இப்போது சி.வி.விக்னேஸ்வரன் பக்கம் தாவியிருக்கின்றன. அதுபோல, தனிக்கட்சி அரசியல் என்கிற நிலைப்பாட்டில் தமிழரசுக் கட்சியினரால் தவிர்க்க முடியாமல் மாவை சேனாதிராஜா முன்னிறுத்தப்படுகின்றார்.

யதார்த்த அரசியல் மற்றும் இராஜதந்திர நிலைப்பாடுகளின் போக்கில் இரா.சம்பந்தனுக்கு பின்னரான தலைமைத்துவத்துக்கு மாவை சேனாதிராஜாவோ, சி.வி. விக்னேஸ்வரனோ அவ்வளவு பொருத்தமான தலைவர்களாக இல்லை என்பது வெளிப்படை. ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டில் மாவை சேனாதிராஜாவுக்கும் சி.வி. விக்னேஸ்வரனுக்குமான பார்வையில் அவ்வளவு வித்தியாசங்கள் இல்லை.

அதுபோல, நீடித்த அரசியலின் போக்கில் சீக்கிரமாக பதற்றமான கருத்துக்களை வெளியிட்டு முரண்பாடுகளை அதிகரித்துக் கொள்ளும் தன்மை கொண்ட ஒரே நிலையிலேயே இருவரும் இருக்கின்ற வர்கள் (தமிழ்த் தேசிய அரசியலின் தலைமைத்துவத்துக்கு இரா.சம்பந்தன் எவ்வளவு பொருத்தமானவர் என்கிற கேள்விக்கான தருணம் இன்னமும் முடிந்துவிடவில்லை என்பது வேறு விடயம்).



# பூமியில் 6 ஆவது மிகப் பெரும் பேரழிவை தொடங்கி வைத்துவிட்ட மனிதர்கள்



பூமியில் மிக பெரிய அளவில் 6ஆவது முறையாக நடக்க இருக்கும் பேரழிவை மனிதர்கள் தொடங்கி வைத்து விட்டனர் என்றும் அதனால் தங்களது சொந்த வருங்காலத்தை அச்சுறுத்தல் நிறைந்த ஒன்றாக மாற்றி விட்டனர் என்றும் புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. டைனோசர்களை போன்று மனிதர் களும் பெரிய அழிவை சந்திக்க உள்ளனர் என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடந்த 65 மில்லியன் வருடங்களுக்கு முன் பூமியில் இருந்து டைனோசர்கள் முற்றிலும் அழிந்ததை அடுத்து உயிரினங்கள் மீண்டும் அழிவதில் இருந்து தடுப்பதற்கான வாய்ப்பு வேகமுடன் குறைந்து வருகிறது என்று ஆய்வாளர்கள் எச்சரித்திருக்கின்றனர். கடந்த நூற்றாண்டில் 114 மடங்கு அதிகமாக முதுகெலும்பு கொண்ட உயிரினங்கள் மறைந்து போயுள்ளன. தற்பொழுது உள்ள அழிவுநிலை தொடர்ந்து நடைபெற்றால், உயிரினங்களின் இழப்பு மனிதர்களின் 3 தலைமுறைகளுக்குள் முக்கிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

ஒரு முறை சேதம் ஏற்பட்ட பின் அதிலிருந்து மீண்டு வர பல மில்லியன் வருடங்கள் ஆகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 1900 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 400 முதுகெலும்பு உயிரினங்கள் எதிர்பார்த்ததை விட அதிக அளவில் மறைந்து விட்டன. அவற்றில் 69 பாலூட்டிகள், 80 பறவைகள், 24 ஊர்வன, 146 ஈருடக வாழிகள் மற்றும் 158 மீன் இனங்களும் அடங்கும்.

உயிரினங்களின் இழப்பு சுற்றுச்சூழலை பாதிப்பதுடன், மோசமான விளைவுகளை மனிதர்கள் உணரும் நிலைக்கு கொண்டு செல்லும் என அறிவியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். தேனீக்களால் மேற்கொள்ளப்படும் பயிர்களில் நடைபெறும் மகரந்தச் சேர்க்கை மற்றும் ஈர நிலங்களில் உள்ள நீர்நிலைகளை சுத்தப்படுத்துதல் ஆகிய சுற்றுச்சூழல் தொடர்பான இரு உதாரணங்கள் மனிதர்களின் 3 தலைமுறைகளுக்குள் இழக்கும் நிலை உள்ளது.

பூமியில் மிக பெரிய அளவிலான பேரழிவுகள் 5 முறை நடந்துள்ளன. கடைசியாக 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமி மீது பெரிய விண்கல் ஒன்று மோதியதை அடுத்து பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு டைனோசர்கள் முற்றிலும் அழிந்து விட்டன. ஒரு நூற்றாண்டில், 10 ஆயிரம் உயிரினங்களில் 2 பாலூட்டிகள் முற்றிலும் அழிந்து போனது குறித்து ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கடந்த 100 ஆண்டுகளில் மறைந்து போன உயிரினங்களின் எண்ணிக்கை அடிப்படையில், இந்த விகிதம் தொடர்ந்து நீடிக்குமென்றால் 800 முதல் 10 ஆயிரம் வருடங்களுக்குள் பல உயிரினங்கள் மறையக் கூடும். இது குறித்து ஆய்வாளர்கள் இறுதியாக கூறுவது, நமது உலக சமூகம் பிற உயிரினங்களை அழிக்க அதிக அளவிலான விகிதத்தில் தொடங்கி விட்டது. இது 65 மில்லியன் வருடங்களுக்கு முன்பு நடந்ததைப் போன்றதொரு பெரிய அளவிலான பேரழிவைத் திரும்பக் கொண்டுவரலாம் என எங்களது ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

சுற்றுச்சூழல் அழிவை தற்பொழுது தவிர்ப்பதற்கான பாதுகாப்பு முறைகளை கையாள்வது சாத்தியம் என்றாலும், நேரம் கடந்து விட்டது என அவர்கள் கூறியுள்ளனர். உண்மையில் 6ஆவது மிகப் பெரும் அழிவைத் தடுப்பதற்கு, அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களை பாதுகாக்க மிக வேகமுடன், பெரிய அளவிலான தீவிர முயற்சிகள் தேவை.

இமோஜி போல வருமா?

அலன் டெய்லர் இயக்கியுள்ள இப்படம் அடுத்த மாதம் 3ஆம் திகதி வெளியாகிறது.

✤ கார்த்திக் சுப்புராஜின் உதவியாளர்

✤ சிம்புவை வைத்து, சில ஆண்டுகளுக்கு முன் வெற்றிமாறன் இயக்கவிருந்த படம், வடசென்னை. அப்படத்தை, தற்போது தனுஷும்

ராஜபக்ஷ இருந்த வரை அது ... தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ... விடயம்). ... பெரிய அளவிலான தீவிர முயற்சிகள் தேவை.

# இமோஜி போல வருமா?




இணைய வெளியில் சமீப காலமாக ஹிலாரி கிளின்டன் பெயர்தான் அதிகம் அடிபட்டது. எல்லாம், அவர் அமைச்சராக இருந்த காலத்தில் இமெயில் பயன்படுத்திய விதம் தொடர்பான சர்ச்சைதான். ஹிலாரி, 2004 முதல் 2009 வரை அமெரிக்க வெளியுறவு அமைச்சராக இருந்தார். அந்தக் காலத்தில், அவர் அரசு இமெயிலை பயன்படுத்தாமல் தனிப்பட்ட மெயிலை பயன்படுத்தியதை, பிரபல நாளிதழான நியூயோர்க் டைம்ஸ் கண்டறிந்து அம்பலமாக்கியது.

அமைச்சராக இருந்தவர் தனிப்பட்ட மெயிலை பயன்படுத்தியது, தகவல் பரிமாற்ற விதிகளை ஆக அடிப்படையான விதிகளை மீறும் செயலாக கருதப்பட்டது. வீதி முறைக்கு விரோதமாக அமைந்திருப்பதாக, ஹிலாரி விமர்சனத்துக்கு இலக்கானார். இதனிடையே, ஹிலாரி தனிப்பட்ட மெயிலை பயன்படுத்தியது மட்டும் அல்லாமல், அவரது சொந்த சேர்வரையும் பயன்படுத்தியதாகக் கூறப்பட்டது. செய்தித் துறை ஒன்று அம்பலமாக்கியது.

அரசுப் பணிக்காக ஒரு மெயில், தனிப்பட்ட மெயிலுக்காக ஒரு மெயில் என வைத்துக்கொள்ளும் சங்கடத்தை தவிர்க்கவே ஒரே மெயிலாக தனிப் பட்ட மெயிலை பயன்படுத்தினேன் என ஹிலாரி கொடுத்த விளக்கத்தை பலரும் ரசிக்கவில்லை. இந்தச் சர்ச்சையில் இருந்து தப்புவதற்காக, பதவிக் காலத்தில் தான் பெற்ற பணி தொடர்பான மெயில்களை 30,000 பக்கங்களில் ஹிலாரி அச்சிட்டுக் கொடுத்தது தனிக்கதை.

இந்த இமெயில் சர்ச்சை, 2016இல் அதிபர் தேர்தலில் போட்டியிடும் ஹிலாரியின் கனவை பாதிக்குமா என்னும் விவாதம், அமெரிக்காவில் சூடாக நடந்துகொண்டிருக்கும் நிலையில், பிரபலமான நியூயோர்க்கர் பத்திரிகை இந்த விவகாரம் தொடர்பான முகப்புக் கட்டுரையை வெளியிட்டுள்ளது. இந்தக் கட்டுரையில் என்ன விஷேசம் என்றால், இது முழுக்க முழுக்க இமோஜிகளால் அமைக்கப்பட்டிருப்பதுதான். ஐகொன்கள் மூலம் கருத்துகளை பரிமாறிக்கொள்ள உதவும் காட்சி மொழியாக இருக்கும் இமோஜிகள், இக்கால தலைமுறை மத்தியில் பிரபலமாக இருப்பது தெரிந்த விஷயம்தான்.

இந்த நிலையில், ஹிலாரியின் முகத்தை பல்வேறு வடிவிலான இமோஜிகளாக வரைந்து, அட்டைப் படமாக நியூயோர்க்கர் வெளியிட்டிருந்தது. இந்த அட்டைப் படம் இணையத்தில் பலரையும் கவர்ந்தது. மட்டுமல்லாமல், இமோஜிகள் மூலம் ... அறிய முடிகிறது.

இந்த அட்டைப் படத்தை உருவாக்கிய கலைஞர் பேரி பிளிட், ... இமோஜிகளை பயன்படுத்தியதாக கூறியுள்ளார். ... இந்த அட்டைப் படம் ... நியூயோர்க்கரின் ... இதற்கு முன்னதாக ... அட்டைப் படங்கள் ... வரவேற்பைப் பெற்றுள்ளன. ... "பல்லூன் பொக்ஸ்" ... அத்தனையும் அருமையாக இருக்கின்றது.

# பல்வலிப் பூண்டு

பல்வலிப் பூண்டு என்றொரு குறுஞ்செடிவகை உள்ளது. இதை இன்றும் கிராமப்புற மக்கள் பல்வலி, சொத்தைப்பல் வலி, ஈறு வீக்கம் ஆகியவற்றிற்கு இலைகளைப் பறித்து மென்று வாயில் அடக்கிவைத்து கொப்பளித்து வருகின்றனர். உமிழ்நீர் சுரப்பி இத்தாவரத்தில் அதிகம் ... அதுவே பின்னாளில் வாய்ப்புற்று நோயாக மாறுவதும் அதிகமுள்ளதாக உலகசுகாதார மையம் அறிவித்துள்ளது. இதற்காக இந்தியத் தலைநகர் டெல்லியில் ஆய்வு செய்து முதல் கட்டமாக இந்தச் செடியின் சாறைக் கொண்டு "மவுத்வோஷ்" தயாரிக்க ஆய்வு செய்து வருகின்றனர். பல்வலி, வாயின் உமிழ்நீர் சுரப்பிகளில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வாய்த் துர்நாற்றம் போக்க இந்த "மவுத்வோஷ்" பயன்படும் என்று நம்புகின்றனர். இது இரண்டாம் கட்ட ஆய்வு. முதல்கட்ட ஆய்வில் இச்செடியின் காய்ந்தூள் 5 கிராமை 100மி.லீ. நீரில் காய்ச்சி 50 மில்லி ஏற்றாகக் சுருக்கி அத்துடன் நல்லெண்ணெய் சேர்த்து வாய் கொப்பளித்து வர மேற்படி பிரச்சினைகள் குறைகின்றன, குணமாகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.



# சினிமா சினிமா

❖ கடந்த 1987இல் கமலை வைத்து மணிரத்னம் இயக்கிய படம், நாயகன். அப்படத்திற்கு பின், அவர்கள் இணையவில்லை. ஓ காதல் கண்மணி படத்தை அடுத்து, மகேஷ்பாபு - ஐஸ்வர்யாராய் இணைந்து நடிக்கும் படத்தை இயக்கும் மணிரத்னம், அதைத் தொடர்ந்து, கமலை வைத்து, ஒரு மெகா படத்தை இயக்க இருக்கிறார். ஹொலிவுட் படங்களுக்கு நிகராக உருவாகும் அப்படம், நாயகனை மிஞ்சும் ஆக்ஷன் கதையில் தயாராகிறது. தற்போது நடித்து வரும், தூங்காவனம் பட வேலைகள் முடிந்ததும், மணிரத்னம் இயக்கத்தில் நடிப்பதை, அதிகாரபூர்வமாக வெளியிடுவாராம் கமல்.

❖ பொலிவுட் நடிகை பிரியங்கா சோப்ராவின் தங்கை உறவு முறை கொண்டவர் நிஷா. எஸ்.ஜே.சூர்யாவின் "அன்பே ஆருயிரே" படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான அவர், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் பரபரப்பான நடிகையானார். ஆனால், திடீரென்று திரையுலகை விட்டு காணாமற் போனார். அவரை இசை படத்தின் மூலம் ஒரு காட்சிக்காக அழைத்து வந்தார் எஸ்.ஜே.சூர்யா. அவரால் மீண்டும் காஜாரன் முடியவில்லை. ஆனால் பிரியங்கா சோப்ராவின் தங்கை உறவு முறை கொண்ட மற்றொரு நடிகை பார்பி சோப்ரா. டோலிவுட்டில் மகேஷ்பாபு நடிக்கும் "பிரம்மோத்சவம்" படத்தில் அறிமுகமாக உள்ளார். ஏற்கனவே ஹிந்தி படத்தில் கவர்ச்சிக்கு கொஞ்சமும் அஞ்சாத கதாநாயகிர்களில் நடித்து பரபரப்பை ஏற்படுத்திய பார்பி சோப்ரா தமிழ், தெலுங்கில் ஒரு சுற்று வருவார் என சொல்லப்படுகிறது.

❖ தற்போது உருண்டு, திரண்டு காணப்படும் அஞ்சலியை, இறைவி படத்துக்கு ஒப்பந்தம் செய்த ஜிகர்தண்டா பட இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ், "உடை குறைத்தால் தான், என் படத்தில் நீங்கள் நாயகி; இல்லையேல் வேறு நடிகையை ஒப்பந்தம் செய்து விடுவேன்..." என்று கூறி, இரண்டு மாதம் காலக்கெடு கொடுத்தார். விளைவு, ஜிம்மே கதியென்று கிடந்த அஞ்சலி, தற்போது ஸ்லிம் ஆகிவிட்டார்.

❖ ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்ற படங்கள் அடுத்தடுத்த பாகங்களாக ஹொலிவுட்டில் வெளிவருவது வழக்கம். இதுவரை நான்கு பாகங்கள் வெளிவந்து வெற்றி பெற்ற "டெர்மினேட்டர்" படத்தின் ஐந்தாம் பாகம் தற்போது உருவாகியுள்ளது. "டெர்மினேட்டர் ஜெனிசிஸ்" என்ற பெயரில் வந்துள்ள இப்படத்தில் ஆர்னோல்ட் ஸ்வாஸநேகர், ஜேசன் கிளார்க், எமிலா கிளார்க், ஜெய் கர்ட்னி உள்ளிட்ட நட்சத்திரங்கள் பலர் நடித்துள்ளனர்.

அலன் டெய்லர் இயக்கியுள்ள இப்படம் அடுத்த மாதம் 3ஆம் திகதி வெளியாகிறது.

❖ கார்த்திக் சுப்புராஜின் உதவியாளர் ராகவேந்திர பிரசாத் கதை எழுதி இயக்குநராக அறிமுகமாகும் படம் "54321." "ரம்மி" படத்தில் நடித்த ஜி.ஆர். அர்வின் இப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார். கதாநாயகிகன்னட வரவு பவித்ரா. இரண்டு மணி நேரம் நடக்கும் கதையைத் திரையிலும் இரண்டு மணி நேரம் நடக்கும் காட்சிகளாக உருவாக்கி உள்ளது இப்படத்தின் சிறப்பு. "காதல்"



ஜோஷ்வா ஸ்ரீதர் நீண்ட இடைவெளிக்குப் பின் இசையமைக்கிறார்.

❖ ஏற்கனவே, தன் இயக்கத்தில் ஹன்சிகா நடித்த, தீயா வேலை செய்யணும் குமாரு, அரண்மனை மற்றும் ஆம்பள போன்ற படங்கள் ஹிட் ஆனதால், தன் படங்களில் ஹன்சிகா இருந்தால், உறுதியாக படம் வெற்றியடையும் என்று நம்புகிறார் சுந்தர்.சி. சித்தார்த் - த்ரிஷாவை வைத்து இயக்கும் அரண்மனை படத்தின் 2ஆம் பாகமான, ஹலோ நான் பேய் பேசுறேன் படத்தில் ஹன்சிகாவை ஒரு முக்கியமான வேடத்திற்கு இழுத்துள்ளார்.

❖ கமல் தனது அடுத்த தூங்காவனம் படத்திற்கு பிரகாஷ்ராஜை ஒப்பந்தம் செய்துள் ளார் அத்துடன், மற்றொரு கன்னட நடிகரான கிஷோரையும் இப்படத்திற்கு ஒப்பந்தம் செய்துள்ளார். இவர்கள் இருவருமே வில்லன் நடிகர்கள் என்பதால், படத்தில் யார் பிரதான வில்லன் என்று கமலை கேட்டால், "இது, "த்ரில்லர்" படம் என்பதால், நிறைய சஸ்பென்ஸ் உள்ளது; அதில் இதுவும் ஒரு சஸ்பென்சாக இருந்து விட்டுப் போகட்டுமே..." என்கிறார்.

❖ சிம்புவை வைத்து, சில ஆண்டுகளுக்கு முன் வெற்றிமாறன் இயக்கவிருந்த படம், வடசென்னை. அப்படத்தை, தற்போது மீண்டும் தூசு தட்டுகிறார் வெற்றிமாறன். ஆனால், சிம்புவின் மார்க்கெட் மற்றும் குறித்த நேரத்தில் படப்பிடிப்புக்கு வராமல், மணிக்கணக்கில் காத்திருக்க வைப்பவர் என்பது போன்ற விஷயங்களை கருத்தில் கொண்டு, அவரை நிராகரித்து வடசென்னை படத்துக்கு, இப்போது தனுஷை ஒப்பந்தம் செய்துள்ளார். இத்தகவலை தனுஷ் தன் டுவிட்டரில் அறிவித்துள்ளார். மீண்டும் தனுஷ் - சிம்பு முறுகல்!

❖ பொலிவுட்டில் படங்களை இயக்கிக் கொண்டிருக்கும் பிரபுதேவாவுடன் இப்போது சுற்றிக்கொண்டிருப்பவர் ஐ பட நாயகி எமி ஜாக்சன். இது காதல், கல்யாணம் வரை போய் நிற்கும் பிணைப்பாக காணப்படுவதாக பொலிவுட் வட்டாரத்தில் பேச்சு.

❖ தெலுங்கில் சிரஞ்சீவியின், 150ஆவது படத்தில் நடிப்பதற்கு, மூன்று கோடி ரூபாய் சம்பளம் கேட்டு, அதிர்ச்சி கொடுத்துள்ளார் நயன்தாரா.

❖ மெட்ராஸ் பட இயக்குனர் ரஞ்சித் இயக்கத்தில், ரஜினி நடிக்கும் படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.

❖ கெத்து படத்தில் பாவாடை - தாவணி கெட்டப்பில் நடித்த போதும், பாடல் காட்சிகளில் வழக்கம்போல ஆடை குறைத்து அசத்தியிருக்கிறாராம் எமி ஜாக்சன்.

❖ "நான்தான் பாலா" படத்துக்குப் பின் விவேக் கதாநாயகனாக நடித்து வரும் படம் "பாலக்காட்டு மாதவன்." ஜோடியாக சோனியா அகர்வால் நடிக்கிறார். "செம்மீன்" ஷீலா, மனோபாலா முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

❖ விஜய் நடித்து வரும், புலி படத்தின் கிளைமாக்சில், அரசர் காலத்து படங்களில் பேசுவது போன்ற தூய தமிழில் பேசி நடித்துள்ளார்.

❖ ஆர்யாவுடன் நடிக்கும், "வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க" படத்தில், காமெடி கதாபாத்திரத்தில் நடிக்கிறார் தமன்னா.

❖ அமர காவியம் படத்தில் நடித்த மியா ஜோர்ஜ், மலையாளத்தில் நடித்த ஐந்து படங்கள் அடுத்தடுத்து ஹிட்டாகியுள்ளன.

❖ காக்கா முட்டை படத்தை தொடர்ந்து, விதார்த்துடன் நடித்து வரும், குற்றமும் தண்டனையும் படத்தை பெரிதாக எதிர்பார்க்கிறார் ஐஸ்வர்யா ராஜேஷ்.

❖ நீ நான் நாம் என்ற படத்தில், 18 வயது பெண்ணுக்கு அம்மாவாக நடிக்கிறார், ஓ காதல் கண்மணி பட நாயகி நித்யா மேனன்.

# திண்மக் கழிவு முகாமைத்துவம்

## ஐ.நா. தொழில்நுட்ப உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் திண்மக் கழிவு பொறிமுறையை ஒருங்கிணைந்த அடிப்படையில் செயற்படுத்த ஐ.நா.யுனொப்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளமை மகிழ்ச்சியளிகிறது இவ்வாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் கழக ஆர்வலருமான சண்முகலிங்கம் சபேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டு திண்மக் கழிவு பொறிமுறை தொடர்பாக கடந்த 15 வருடங்களாக உள்ள சீரற்ற நிலை இதனால் ஏற்பட்ட அபாயங்கள் குறித்து உறுப்பினர் சண்முகலிங்கம் சபேசன் தெரிவிக்கையில்,யாழ் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகள் உண்டு.

இதில் மானிப்பாய், சங்கானை,புத்தூர்,நல்லூர், சுன்னாகம், யாழ்.மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளே இன்று முக்கிமாக பேசப்படும் சபைகளாக உள்ளன.

இச்சபைகளில் இன்று அதிகம் பேசப்படும் சபையாக மானிப்பாய பிரதேச சபை, யாழ்.மாநகரசபை என்பதாகும்.

இவ்வாறான சபைகளின் பிரசசினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அண்மையில் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள் எடுத்த முயற்சியின் பயனாக யாழ்.மாவட்ட திண்ம கழிவுகளை ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத் தின் கீழ் கொத்தணி அடிப்படையில் ஐ.நா. யுனொப்ஸ் நிறுவ னம் விரைவில் பொறுப்பேற்கும் எனத் தெரிகிறது.

எனவே இன்னும் சில காலங்களில் மழை பெய்யத் தொடங்கும்

இதற்கு முன்னர் ஐ.நா.யுனொப்ஸ் திட்ட அதிகாரிகள் யாழ். மாவட்ட திண்ம கழி வுகளை தரம் பிரித்து - மீள் சுழற்றி பயன்பாட்டிற்கு பயன்படுத்தியது போக மீதானவற்றை பசளையாக்கி யாழ் குடாநாட்டு விவசாயிகள் பயனபடுத்தக் கூடிய சேதனப் பசளைகளை வழங்குவதன் மூலம் தோற்று விக கப்படும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

எனவே வடக்கின் திண்மக் கழிவு பிரச்சினைக்கு அடிக்கடி பயிற்சிகள் கருத்தமர்வுகளை நீக்கி முன் மொழிவுகளை முன் வைத்து நிதியை வரவழைத்து செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

இல்லாவிடில் 17 உள்ளூராட்சி சபைகளும் வெறும் கருத்திடல் சபைகளாக மட்டுமே இருக்கும் என்றார் உறுப்பினர் சண்முகலிங்கன் சபேசன்.

(92)

# போதைப் பொருள் விழிப்புணர்வு



போதைப் பொருள் பாவனைக்கு எதிரான வீட்டுக்கு வீடு விழிப்புணர்வு திட்டம் நேற்று முன்தினம் முதல் வட மாகாணத்தில் இடம் பெற்று வருகின்றது. நாட்டின் பல மாவடடங்களையும் சென்றடைய வுள்ள இந்த விழிப்புணர்வு திட்டம் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு , கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களை நோக்கி நடைபெற்று வருகின்றது.

போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத ஆட்கடத்தல் ஒழிப்பு தினமான நேற்று முன்தினம் போதைப்பொருள் நாட்டிற்கும் வீட்டிற்கும் உங்களுக்கும் வேணடாம் என்ற தொனிப் பொரு ளில் இந்த திட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. வீட்டுக்கு வீடு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்த செயற்றிட்டத்தில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகளும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைகோர்த்துள்ளனர்.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நேற்று முன்தினமும், நேற்றும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சர்வ மதப் பிரார்த்தனைகளை தொடர்ந்து விழிப் புணர் வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இந்த நடவடிக்கை ஆரம்பமானது. மேலும் யாழ். மாவட்டத்தின் கொட்டடி மற்றும் குருநகர் ஆகிய பிரதேசங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதே போன்று வவு னியா மாவட்டத்திலும் நேற்று முன்தினம் காலை விழிப் புணர் வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் விழிப்புணர்வு நடவடிக்கை ஆரம்பமாகியது. சர்வ மத பிரார்த்தனைகளுடன் வீட்டுக்கு வீடு செல்லும் விழிப்புணர்வுத் திட்டம் எழுச்சி பெற்றது. இதன் போது மக்களின் ஆதரவு கிடைத்திருந்தது.மேலும் முல்லைத்தீவு மாவட் டத்திலும் மக்களினால் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தன.

# நீதிமன்ற தாக்குதல் இருவருக்கு பிடிவிறாந்து

நீதிமன்ற தாக்குதல் தொடர் பில் வீடியோ ஆதாரத்தின் மூலம் இருவருக்கு பிடிவிறாந்து விடப்பட்டுள்ளது.

யாழ்.நீதிமன்றில் நேற்று முன்தினம் இடமபெற்ற வழக்கு விசாரணையின் போது 2 பேர் வீடியோ ஆதாரத்தில் இருப்ப தாகவும் இவர்கள் தலைமறை வாகியுள்ளமையால் இவர்களைப் பிடிக்க பிடிவிறாந்து விடுக்குமாறும், நாட்டை விட்டு வெளியேறா வண்ணம் தடை செய்ய உத்தரவிருமாறு பொலிஸார் கோரியதையடுத்து அந்த இரு வரையும் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்க உத்தர விடப்பட்டுள்ளதுடன் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லாத வகையிலும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ,25)

# பெண் கைது

விற்பனைக்காக கஞ்சா கடத்தி வந்த பெண்ணொருவரை கைது செய்திருப்பதாக ஏறாவூர் பொலிஸார தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பகுதியில் செங்கலடிச சந்தியில் வைத்தே ,அந்தப பெண்ணை 20 கிராம் கஞ்சாவுடன கைது செய்ததாக பொலிஸார் மேலும் தெரிவிததனர்.

ஏறாவூர் மைலம்பா வெளியைச் சேர்ந்த குடும்பப் பெண் கஞ்சா கடத்தி வருவது சம்பந்தமான தகவல் பொதுமக்களிடமிருந்து கிடைத்ததைத் தொடர்ந்து அவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். சம்பவம் தொடர்பான மேலதீக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு

குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செயவதற்கான விண்ணப்பங்களை சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு கோரியுள்ளது.


இப்பயிற்சிக்கு 2010 இலிருந்து 2014வரையான காலப்பகுதிக்குள தகைமை பெற்றவர்கள் விண்ணப் பிக்க முடியுமெனவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டன.

சிங்களம் ,தமிழ் ஆகிய மொழிகளில் வழங்கப்படும் இப் பயிற்சிக்கான காலம் ஒன்றரை ஆண்டுகள் எனினும் 6 மாதங்கள் வெளிகளப்பயிற்சியாக அமையுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கென தெரிவாகும் பயிலுநர்களின் எண்ணிக்கை அந்தந்த மாகாண வைத்தியசாலைகள் தாபனங்களில் நிலவும் வெற்றிடங்களில்அடிப்படையில் அமையுமெனவும் இது ஒரு முழு நேரப்பயிற்சி என்பதால் சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு அரச தாபனங்களில் பயிற்சி பெறுவோர் இப் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓம் சக்தி நயினை அம்மன்

### நயினை நாகபூஷணி அம்மன் கீர்த்தனை



**பல்லவி**

இந்திரனும் வாணவரும் ஏத்துகின்ற தேவியவள்
எங்கள் நயினைப் பதி உறையும்
நாகேஸ்வரிதேவி
அன்பர் அடி தொழும் அவர் தம்
வினை கெடவும் அரவ அணையிருந்து
அருள் செய்யும் தேவி

**அனுபல்லவி**

அதிகார நந்தியுடன் அழகு மிளிர்
கோபுரமும்
ஆலய வீதியிலே அணி செய்யும்
சோலைகளும்
இதிகாச காலமுதல் மணிப்பீடத்தெழுந்தருளி
எத்திசையும் அருள் வீசும் எம் அம்மை நாகம்மை

**சரணம்**

புத்தம் புதுப் பொலிவூட்டும் புடைச் சிற்பம்
புகழ் சேர்க்கும்
சித்திரத் தேர் வரலாற்றை சித்தரித்து நிற்குமன்றோ!
கத்து கடல் அடி வருட கருடனுடன் பாம்புக் கல்
கதை கூறி சமூகத்தின் காலமெல்லாம் காட்சி தரும்

வித்தை தரும் பக்தி தரும்
மேலான சித்தி தரும் பக்தி தனை தந்தருளும்
தாயவளும் நீயல்லவோ!
இத்தரையில் ஈடில்லா எழில் நாக பூஷணியே
சக்தி மிக்க கரத்தவளே தாரணியே நாரணியே!

கலைவாரிதி
பகிக்கவி கி.பரராஜசிங்கம்
நயினாதீவு

வரம் தந்திடுவாய் தாயே.......

சுயம்புருவானவள் சுந்தர தாயவள்
சமனும் வழிபட்ட சர்ப்ப வாகினி
செந்தமிழ் தாயவள் செந்தூரப் புவியவள்
வரங்கள் தந்திட வந்திடுவாய் தாயே.....

இ.கு.அமுதீசன்
நயினை

**உன்னையே சரணடையும் வரம் தா........**

நயினையிலே இருப்பிடம் கொண்டவளே
உன்னை நர்டி வருவோர் துன்பம் தீர்ப்பவளே
வாழ்வின் வேதனைகள் தீர்த்து
நற்கதி தருவாயம்மா
முன்வினை களைந்து இன்பம் தந்திவாய்
இப்பிறப்பும் எப்பிறப்பும் எமைக்காப்பாய்
எப்பொழுதும் உன்னையே சரணடையும்
வரம் தருவாய் தாயே...........

ஜெ.சிந்து
வேலணை

**நம்மவள் நாகையம்மா............**

நயினையம் பதியினிலே
நடுநாயகமாய் வீற்றிருந்து
நம்மவர்களை காத்திடும்
நம்மவளே நாகபூஷணியம்மா
அகண்ட பாதாளத்துள்
வீழ்த்தப்பட்ட நம்மவர்கள்
அன்று போல் இன்றுமே
சீரியதாய் வாழ்ந்திடவே
நல்லருள் தந்திடுவாய்
நம்மவரை மீட்டிடுவாய்
எங்கெங்கும் காணினும்
தமிழன் தலை நிமிர்ந்திடவே
காத்திடுவாய் நாகையம்மா
எங்கள் மாரியம்மா

அன்புவழியூர் ச.திருச்செந்தூரன்
திருகோணமலை

# போதைப்பொருள் பயன்பாட்டை ஒழிக்க

# சட்டவிரோத உற்பத்தியை கைவிட வேண்டும்

## கிளி.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் போதைப் பொருள் பயன்பாட்டை ஒழிக்க வேண்டுமானால், சட்டவிரோத உற்பத்தியில் ஈடுபடும் நபர்கள் அதனை கைவிட்டால் மாத்திரமே முடியும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

போதைப்பொருள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அதே வேளை, அதனை விற்பனை செய்வோரையும் கண்டறிந்து அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நான் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக கடமையேற்றதை அடுத்து இங்கு போதைப் பொருள் மற்றும் சட்டரீதியான மதுபானங்களை உற்பத்திசெய்வோரது விபரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

அண்மைக் காலங்களில் பாடசாலை மாணவர்கள் கூட இதற்கு அடிமையாகி வருகின்றமையைக காணக்கூடியதாக உள்ளது. அதனை உரிய வழிமுறைகளின் ஊடாக தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.



சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் எனவும், அதற்காக வாழ்வாதாரத திட்டங்களை முன்னெடுக்கும் உதவித்திட்டங்களை முன்னெடுக்க தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.த்தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 02.15 மணியளவில் இடம் பெறவுள்ளது.

அதிபர் நா.தனபாலசிங்கத்தின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு பிரம விருந்தினர்களாக பேராசிரியர் க.தேவராஜா, திருமதி இலட்சுமி தேவராஜா ஆகிய இருவரும் கலந்து கொள்வதுடன், சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் சி.வ.கணேசலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் உப அதிபர்களான ஐ.மனோகரன், த.சிவப்பிரமம், வ.செல்வரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வதுடன்.

இந்நிகழ்விற்கான ஆசியுரையை பிரம்மஸ்ரீ நா.சசிதரசர்மா வழங்குவதுடன், வாழ்த்துரையை இ.சரவணபவன் மற்றும் பரிசில்தின உரையை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குலகுமாரனும் வழங்கவுள்ளதோடு பரிசளிப்பு நிகழ்வு மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னைநாள் யாழ்.மாநகர முதல்வர் எஸ்.எஸ்.நவரட்ணம் ஞாபகார்த்தமாக கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னைநாள் யாழ். மாநகர முதல்வர் எஸ்.எஸ் நவரட்ணம் ஞாபகார்த்தமாக வெளிநாட்டில் வசிக்கும் அவருடைய குடும்பத்தினர் நிதியுதவி வழங்கி வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் சப்பாத்துக்கள் என்பவற்றை வருடாவருடம் வழங்கி வருகின்றனர்.

இந்தவகையில் பன்னிரண்டாவது தடவையாக நேற்றுமுன்தினம் மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. நவரட்ணம் குடும்பத்தினர் சார்பாக இ.சுத் தானந்தன் (சிறி) இதற்கான முழு ஒழுங்கினையும் செய்திருந்தார்.



கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் அதிபர் சி.சிவராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக புளொட் தலைவரும், வட மாகாணசபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், திருமதி.பேரின்பநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), சா.தேவமனோகரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), திருமதி அன்ரீன் வலன்ரீனா (கிராம சேவையாளர்), உபஅதிபர் திருமதி. த.நடேசன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வின்போது வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும், சப்பாத்து தேவையுடைய பிள்ளைகளுக்கான சப்பாத்துக்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க சோமாஸ்கந்தா கிளையின் (C/9) விசேட பொதுக்கூட்டம் இன்று இடம் பெறவுள்ளது.

காலை 10 மணிக்கு சோமஸ்கந்தா மண்டபத்தில் கிளைத் தலைவர் கா.வேதநாயகம் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் புதிய அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்படல், மற்றும் முன்னரைப் போன்று வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகள் அங்கத்தவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளல் என்பன இடம் பெறவுள்ளதாக அதன் செயலாளர் சி.கந்தசாமி அறிவித்துள்ளார். (இ)

# கிராம சேவையாளரை தாக்கியவரை தடுப்புக்காவல் வைக்க உத்தரவு

(கரணவாய்)

கரவெட்டி இராஜ கிராமத்தில் கிராம சேவையாளரான சசிகாந்தன் (வயது 35) என்பவரை தாக்கிய சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்க பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் வீதி புனரமைப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்த போது தனது வீட்டிற்கு வீதியை அமைத்துத் தருமாறு கோரியே கிராம சேவையாளரை தாக்கிய நிலையில் நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று பொலிஸரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதே இவ்வுத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. (18)

# பதிவிறக்கப் பெட்டகம்

தோளில் அமர்ந்து பின் பறக்கும்
புறா இறக்கைகளின் கதகதப்பு
இருந்துகொண்டேயிருக்கிறது.
இருக்கிறாற் போல் இருந்து
திடீரென்று முட்டும்
கன்றுக்குட்டியின் மோதல்
இன்னமும் இதமாய் வலிக்கிறது.
உணவுக்காகத் தாவிய நாய்
மார்பில் கால் வைக்க
பயந்து தடுமாறி விழுந்த
சிறு வயதுக் காயத் தழும்பு
முதுகில் இருக்கிறதா தெரியவில்லை.
டி.வி. பார்க்க அமரும்போதெல்லாம்
மடியில் வந்து படுத்துக்கொள்ளும் பூனை
எங்கே போயிற்றோ.
எல்லாம் காணாமல் போக
நான் பெரியவனானேன்.
– ஜ்யோவ்ராம் சுந்தர்

இரா முழுக்கத்
தவம் கிடந்தன
வான் நிறைய மீன்கள்.
பரிதியை
நேர் நின்று கண்டதோ
விடிய வந்த ஒரு வெள்ளி.
– ராஜசுந்தரராஜன்

கோடி ஆறுகளின்
சாயலுடன்
தனித்திருக்கிறது
கடல்.
– அதிஷா

இரண்டு மாடிக்கடையில்
விற்பனை பிரதிநிதியென்று
அறிமுகப்படுத்திக் கொண்டவன்
இந்த புதுசெல்போனில்
பிரியமானவர்களின்
மனதின் குரலோடு
ரகசியமாக பேசலாமென்றான்.
பதிலேதும் சொல்லாமல்
புன்னகையோடு பார்த்தேன்.
என் மீது நம்பிக்கை வரவில்லை போலும்.
வரிசையாக சொல்ல ஆரம்பித்தான்.
பாட்டு கேட்கலாம்.
படம் பார்க்கலாம்.
படம் பிடிக்கலாம்.
குறிப்பெழுதலாம்.
கடிகாரம் உண்டு.
கலண்டர் பார்க்கலாம்.
விளையாடலாம்.
புத்தகம் படிக்கலாம்.
ஓவியம் வரையலாம்.
கணக்குகள் செய்யலாம்.
கடவுளையும் வரவழைக்கலாம்..
கடையை விட்டு
வெளியேறும்போதுதான்
கவனித்தேன்.
அவனைச் சுற்றி சின்னக் கூட்டம்.
அவன் தலைக்குப் பின்னால்
சிறு ஒளி வட்டமொன்று
படர ஆரம்பித்திருந்தது.
– விநாயகமுருகன

நினைப்பதில்
உள்ள சுகம்
முடிப்பதில் இல்லை.
– விக்ரமாதித்யன்

புத்தன்
தடாக நடுவின்
தாமரையைப் பார்க்கிறான்
ஏதோ நினைவுடன்.
பாய்ந்து நீந்திப்
பறித்து வந்து நீட்டுகிறான்
ஆடு மேய்க்கும் சிறுவன்
புதிய முறுவலுடன்.
அவனிடம் அன்று
கடன் வாங்கியதுதான்
புத்தனிடம் இன்று
நாம் காணும்
இன் முறுவல்.
–கலாப்ரியா

வானவில்லின்
மறுபுறம் மிதக்கும்
நீலப் பறவைகள் போல
நம் குழந்தைகள் இருக்கிறார்கள்
ஆழக் குதிக்கும் ஆற்றில்
நாம் அவர்கள் தற்காலிகமாகத் தாவி நிற்கும்
ஒரு பாறை யெனவே நிற்கிறோம்
நம்மிடமிருந்து உந்தி எழுந்துப் பறந்து
உன்னைவிடவும் என்னைவிடவும்
அவர்கள் பிரபஞ்சத்தை இன்னும்
கூர்மையாக அறிவார்கள்
நீண்ட தூரம் பறப்பார்கள்
பாறைகள் பறப்பதில்லை தான்
ஆனாலும் யார் கண்டது?
அவர்கள் நம்மையும் பறவையாக்கும்
ஒரு சொல்லோடு
என்றேனும் திரும்பி வருவார்கள்.
– போகன் சங்கர்

வீடென்பது இடமா
விரும்பும் மனமா

வீடென்றால்,
எல்லோருக்குமே
அம்மா

ஊருக்குள்
இருக்கிறது வீடு
வீட்டிற்குள்
இருக்கிறார்கள்
ப்ரியமானவர்கள்

ப்ரியமானவர்களைத்தான்
தேடுகிறது உள்மனது

வீடு கிட்டத்தில்
இருக்க வேண்டும்
வேண்டியவர்கள்
பக்கத்தில்
இருக்க வேண்டும்

வீடென்பது கனவு
வெளியென்பது எதார்த்தம்
வீடும் வெளியுமாய்த்தான்
விளங்குகிறது உலகம்

இங்கு எதற்காக வீடு
திரும்ப வேண்டும் நாம்?
யார் எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள்
நம்மை?
– விக்ரமாதிக்யன்

அசைந்து அசைந்து
மலைப்பாம்பு
வந்து சேர்வதற்குள்
மரணம்தான்
எவ்வளவு நேரம்
காத்திருக்க
வேண்டியதிருக்கிறது?
– சுகுணா திவாகர்

வெள்ளம் சூழ்ந்துன்
வேர்கள் பற்றறுந்து
விழாதிருக்கத் தவிப்பாய்!
அப்போதுதான்
நீ விரும்பிய கிளி வந்துன்
கிளை மீதமரும்!
– மகுடேசுவரன்

# மக்கள் விருப்புக்கு ஏற்ப மாற்றங்கள் வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை



புதிய தேர்தல் சீர்திருத்தத்தின் போது சிறுபான்மைக் கட்சிகளுடையதும் மற்றும் சிறு கட்சிகளுடையதும் அபிப்பிராயங்களும் கோரப்பட்டன. அவ்வாறு அபிப்பிராயங்கள் கோரப்பட்டபொழுது நாங்கள் தெரிவித்த விடயங்கள் அல்லது எங்களுடைய சிபாரிசுகள் அல்லது எங்களுடைய ஆலோசனைகள் அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்திலோ உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இந்தப புதிய தேர்தல் சீர்திருத்தத்தில் சிறுபான்மை மக்களதும் சிறு கட்சிகளதும் கோரிக்கைகள் போதியளவு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது எங்களுக்கு கவலையான ஒரு விடயமாக இருக்கின்றது. அந்த வகையிலேயே இந்த விவாதத்தில் நான் எங்களுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகின்றேன். என்று டக்ளஸ்தேவானந்தா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில தெரிவித்தார்.

தற்போது இருக்கின்ற தேர்தல் முறைமை என்பது ஒரு ஜனநாயகத் தன்மையைக் கொண்டதாக, அதாவது மக்கள் தாங்கள் விரும்புகின்றவர்களைத் தெரிவு செய்யக் கூடியதாக இருக்கின்றது. அதே நேரத்தில் அதில் சில குறைபாடுகளும் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்துகொண்டு, சிறுபான்மை மக்களுக்குப் போதியளவு பெண் பிரதிநிதித்துவங்கள் கிடைக்கக்கூடிய வகையிலான ஒரு ஏற்பாடும் அதேபோல இன்னும் கூடிய ஜனநாயகத் தன்மை கொண்டதான ஏற்பாடும் பல கட்சிகளுடைய, அதாவது சிறிய கட்சிகளுடைய, உள்வாங்கலும் இந்தப் புதிய திட்டத்தில் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையும் எதிர்பார்ப்புமாக இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினுடைய ஒரு பொதுவான முடிவாக, மொத்தமாக 255 ஆசனங்கள் இந்தப் புதிய முறையில் உள்ளடங்க வேண்டும். அதாவது165 தொகுதிவாரியான உறுப்பினர்களைக் கொண்டதாகவும் அதே வேளை 65 விகிதாசார ரீதியிலான உறுப்பினர்களைக் கொண்டதாகவும் 25 தேசியப் பட்டியல் உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இது அமைந்திருக்கின்றது. அதில்கூட நாங்கள் மாற்றங்களைக் கோர இருக்கின்றோம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அவர்கள் அதனை உள்வாங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில், அங்கு இடம்பெற்ற அர்த்தமற்ற யுத் தத்தினால் பல குடும்பங்கள இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து போனதாலும் இறந்ததாலும் அதன் சனத்தொகை விகிதாசாரத்தில் ஒரு பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. உதாரணத்துக்கு யாழ். தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டுக் கணக்கின்படி இன்றைக்கு அங்கு 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருக்க வேண்டும். ஆனால், இன்று இருப்பதோ கிட்டத்தட்ட 6 இலட்சம் பேர். ஆகவே, யுத்த பாதிப்புக்களை ஈடு செய்யக்கூடிய வகையில் அதற்குப் பரிகாரமாக 1978ஆம் ஆண்டிலிருந்த அதே ஆசனத் தொகையைத் தற்காலிகமாக வேனும் - இரண்டு குடிசன மதிப்பீட்டுக் காலத்திற்கு - நீடிக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

ஏற்கனவே பல சந்திப்புக்களில் இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. கொள்கையளவில் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் அது இந்த இருபதாவது திருத்தச் சட்டமூலத்தில் உள்வாங்கப்படவில்லை. அதையும் இந்தச் சபையினுடைய கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் என்றும் தெரிவித்தார்

# நாடாளுமன்றம் கலைப்பு

# ஐ.நா. நிகழ்ச்சி நிரலின் படியா நடந்தது?

## தெற்கிலிருந்து விமர்சனம்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என்று ஐ.நா பொதுச்செயலருக்கு அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன நாடாளு மன்றத்தைக் கலைத்துள்ளார்என்று விமர்சனம் கிளம்பியுள்ளது.

வரும் செப்ரெம்பர் மாதம் 15 திகதி நாள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில், இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஐநா விசாரணை அறிக்கை. சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக, இலங்கையில் பொறுப்பு வாய்ந்த புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று அனைத்துலக சமூகம் எதிர்பார்ப்புக் கொண்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தொலைபேசியில் தொடர்பு கொணடிருந்த ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் இதுகுறித்து வலியுறுத்தியி ருந்தார்.

அதற்கு ஜனாதிபதி, வரும் செப்ரெம்பரில், ஜெனிவாவில் கூட்டம் ஆரம்பமாகும் போது, இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியில் இருக்கும் என்றும், புதிய அரசின் பிரதிநிதிகளுடன் தாமும் ஜெனிவா கூட்டத் தொடரில் பங்கேற்பேன் என்றும் ஐ.நா பொதுச் செயலருக்கு ஜனாதிபதி மைத்திரி வாக்குறுதி அளித்திருந்தார்.

அத்துடன், கடந்த மாதம் கொழும்பு வந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியும், செப்ரெம்பர் மாத ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையிலேயே, செப்ரெம்பர் முதலாம் திகதி நாள் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டும் வகையில், ஆகஸ்ட் 17ஆம் திகதி தேர் தலை நடாத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார் என்று ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

# மோசடிப் பேர்வழிகளுக்கு தேர்தலில் வாய்ப்பு இல்லை

## அஜித் சொல்கிறார்

ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்கள் வழங்கப்பட மாட்டாது என முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றம் அறிமுகம் செய்யப்படாத போதிலும் அர சாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கு தேர்த லில் போட்டியிட வாய்ப்பு அளிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்க மாட்டார்கள் என தெரிவித்துள்ளார்.

யார் யார் குற்றவாளிகள் என்பது கட்சிகளுக்குத் தெரியும் எனவும் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தம்மை ஆட்சி நடாத்த வேண்டுமென மக்கள் விரும்பவில்லை என அவர் சுட்டிக்காட்டி

---

### தினமுரசுக்கு வந்த கடிதம்

## காரைநகர் பிரதேச சபைக்கு இருமாடி தலைமையகம் கிடைக்குமா?

### உள்ளூராட்சி அமைச்சர், பிரதம செயலாளர், அரசாங்க அதிபர் ஒரு கணம் விழித்துப் பார்க்க வேண்டும்


வடக்கில் காரைநகர் பிரதேச செயலகமும் – காரைநகர் பிரதேச சபையும் இறுதியாக உருவாக்கம் பெற்ற அரசாங்க நிறுவனங்களாகும்.

முன்னாள் இந்து கலாசார அமைச்சராக இருந்த மறைந்த தி.மகேஸ்வரனின் அயராத முயற்சியினால் இந்த இரு அரச நிறுவனங்களும் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றன.

இங்கு காரைநகர் பிரதேச செயலகம் 9 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அதற்கென ஒரு கட்டடத்தை தன்னகத்தே உருவாக்கி பணியாற்றுகின்றது.

ஆனால் காரைநகர் பிரதேசசபை உருவாக்கப்பட்ட காலம் முதல் இதுவரை சொந்தக் கட்டமின்றி சிறிய வீட்டிலேயே உள்ளூராட்சி சேவைஇடம்பெறுகிறது.

வடக்கில் பெரும்பாலான சபைகள் இன்றைய மிலேனியம் காலத்தில் தன்னகத்தே தனக்கே உரித்தான நிலம், புவியியல் தன்மை, வருமானம்,மக்கள்தொகை, என்பவற்றிற்கு இணங்க உட்கட்டுமானங்களை இருமாடிகளில் அமைத்து சேவை இடம்பெறுகின்றது.



கடந்த காலங்களில் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு சேவை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் பெரும்பாலான சபைகள் தமக்கென அழகான இருமாடிக் கட்டடங்களை மிக அழகாக பெற்றுள்ளன.

அந்த வகையில் அந்தநேரங்களில் உள்ளூராட்சி மன்ற செயலாளராக (காரைநகர்பிரதேச சபை P.S)இருந்தவர்களின் பிற்போக்கிலான தன்மையினால் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படாததால் கட்டடத்தை பெறும் சூழல் 100வீதம் இருந்த போதும் அதனைப் பெறாது வீதிகளைப் புனரமைத்து கட்டடத்திற்கான தீர்மானத்தை மழுங்கடித்தது.

இதன் பின்னர் காரைநகர் பிரதேச சபைக்கான ஆளும் கட்சி – எதிர்கட்சிகளை உள்ளடக்கிய சபைச் தேர்தல் மூலம் உருவாகி சில மாதங்களில் முடிவடையவுள்ளது.

இச்சபையும் தனது நான்கு வருட காலத்தில் உருப்படியான உட்கட்டுமான (சபைக்கான இருமாடிக் கட்டடம்)திட்டங்களை முன்வைக்காது மக்கள் சேவைகளை முன்னிறுத்தாது காலத்தை கடத்தி விட்டனர்.தற்போதுஅங்கு பணியாற்றும் 22 அலுவலர்களும் கடும் வெறுப்புணர்வுடன் சேவைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சபை செயலாளரும் எவ்வித முன்னசைவு பின்னசைவு இன்றி மந்தமான போக்கில் கடமையாற்றுகின்றார்.

எது எப்பிடியிருப்பினும் காரைநகர் பிரதேச சபை பிற்போக்கிலான– உட்கட்டமைப்பு மற்றும் நவீன வசதிகள் , வாகன வசதிகள் இன்றி உள்ள சபையாக இனம் காணப்பட்டுள்ளது.

வருமானமும் மிகக் குறைந்த சபையாக உள்ளது. அங்கு கடமையாற்றும் அலுவலர்களும் பெரும்பாலும் யாழ்ப்பணம் மற்றும் இதர பிரதேசங்களில் இருந்த வருகை தந்து சேவை புரிகின்றனர்.

எனவே காரைநகர் பிரதேச சபைக்கு சபைச் செயலாளர் நவீன இருமாடிக் கட்டடத்திற்கான முன்மொழிவுகளைமுன்வைக்க வேண்டும் (23 மில்லியன் ரூபா)

இந்நிதியை பெறுவதற்கான சூழலை ஏற்படுத்துகின்ற அதேவேளை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் , பிரதம செயலாளர்,வடக்கு முதல்வர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோர் முன்வந்து உழைக்க வேண்டும்.

இதனைவிட தற்போது மத்திய அரசின் பங்காளியாக இருக்கின்ற மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி வி.மகேஸ்வரன் இதற்கான நிதியை நேரடியாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து பெற்று இவ்வாண்டே இருமாடி கட்டடங்களை அமைத்துவழியமைக்கலாம்.எது எப்படியிருப்பினும் காரைநகர் பிரதேச சபை தீவகத்தில் தனித்துவமான சபையாகும்

இச் சபைக்கு ஒரு நவீன இரு மாடிக் கட்டடம் பெறுவதற்கும் மக்கள் சேவை – பேண்தகு சேவை இடம்பெறுவதற்கும் அலுவலர்கள் முழுநிறைவோடு சேவையாற்றுவதற்கும் வலந்தலை சந்தியில் புதிய கட்டடத்தை எதிர்பார்த்து இருக்கின்றது.

யார் கை கொடுத்து உதவுவார்கள் என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

க.செல்வராஜா

# மகிந்தவைப் பிரதமராக்க பசில் தீவிர பிரயத்தனம்


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் முனைப்புக்களில் முழு வீச்சில் ஈடுபடப் போவதாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் அடுத்த பிரதமராக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்படுவதனை உறுதி செய்ய முழு அளவில் பங்களிப்பு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


எவ்வாறெனினும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதனை தாம் இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதில் முழுக் கவனத்தையும் செலுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ காரணமாகவே தாம் அரசியலில் தடம பதித்ததாகத் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் மிரிஹானவில் அமைந்துள்ள மகிந்தவின் இல்லத்தில் தேர்தல் தந்திரோபாயங்கள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரை யாடி யுள்ளனர்.

35.



மேற்குறித்த தொடரில் அடுத்துவரும் உரு பின்வருவனவற்றில் யாது?




(i) (ii) (iii)

36. பின்வருவனவற்றுள் எது ஓர் அபிப்பிராயம் ஆகும்?
1) பூமி சூரியனைச் சுற்றிச் சுழல்கிறது 2) சந்திரன் ஒரு கோள் ஆகும்
3) பூரணை தினங்களில் மழை பெய்யும்

37. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எது அபிப்பிராயம் அன்று
1) வெண்ணெயை விட மாஜரீன் நன்று 2) வெண்ணெய் ஒரு விலங்கு உற்பத்திப் பொருளாகும்
3) இருதய நோயாளிகள் எப்போதும் இரக்கமுள்ளவர்கள்

38. இங்கே தரப்பட்டுள்ளவற்றுள் சமபக்க முக்கோணியில் முறிந்த கோடுகளினால் காட்டப்படும் மூன்று சமச்சீர்க்கோடுகள் இருக்கின்றன. முறிந்த கோடுகளில் யாதாயினும் ஒன்றின் வழியே முக்கோணி மடிக்கப்படும் போது மடிப்பின் ஒரு பக்கம் மற்றைய பக்கத்துடன் செப்பமாகப் பொருந்தும் என்பதே இதன் கருத்தாகும்



கீழே தரப்பட்டுள்ள வரிப்படங்களுக்கிடையே முக்கோணியில் இருக்கின்றவாறு மூன்று சமச்சீர் அச்சுக்கொண்ட உரு யாது?

(i) (ii) (iii)



## நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (01) 1. விரும்பிய வசனம் எழுதவும் | (02) 2. திரும்புகின்றனர் | 3. வருவாயா? | 4. திகழ்வது |
| 5. தருகின்றன | 6. செய்கின்றார்கள் | 7. வழங்கியது | |
| 8. I. புகழ் பெற்ற விஞ்ஞானி | II. பிரான்ஸ் நாட்டில் டோல் என்னும் இடத்தில் | | III. 1822.12.27 |
| IV. பல்கலைக்கழகம் | V. விஞ்ஞானி / பேராசிரியர் | VI. புகழ் பெற்ற | 09. I. தூற்றிக் |
| II. அறிந்து | III. திரண்டால் | ஆ) I. பழிவாங்கல் | II. மோசடி |
| III. பொய் | IV. யாத்திரை | 10. I. உனக்கு அப்பிள் பழம் வேண்டுமா? | |
| II. எனது புத்தகம் எங்கே இருக்கிறது? | 11. Where is the hospital? | 12. I. Laboratory | II. Toilet |
| 13. மம பாசலட யனவா | 14. எல்லோரும் வகுப்பில் இருக்கிறார்கள் | | 15. I. முயற்சி |
| II. வன்மைமிக்க | III. விபத்து | IV. எறும்பு | |
| 16. பத்தாயிரத்து ஒன்பது | 17. 498, 894, 984, | 18. 400, 0 | 19. $\frac{4}{20}$ |
| 20. I. ஏதேனும் ஐந்து பெட்டிகளை நிழற்றல் | II. $\frac{5}{10}$ / $\frac{1}{2}$ | 21. I. 32250/= | |
| II. 5375/= | | | |
| 22. 960.00 | 23. I. 20:00 மணித்தியாலம் | II. பி.ப 3.15 | 24. 18 / 8 /25 |
| 25. 19kg 800g | 26. 875ml | 27. 4m 97cm | 28. 06400 |
| 29. I. 45 | II. 75 வரை நிழற்றல் | 30. I. சதுரமுகி | II. 8 |
| (03) 31. 1 | 32. 2 | 33. 1 | 34. 1 |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) 01 தொடக்கம் 29 வரையான வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

01. நத்தைகளைப் பிடித்து உண்ணும் பறவை
1) செண்பகம் 2) ஆந்தை 3) குருவி 4) கிளி

02. மரங்களில் காணப்படும் இயற்கையான பொந்துகளில் வாழாத பறவை
1) ஆந்தை 2) கிளி 3) மீன்கொத்தி 4) கோட்டான்

03. இலங்கை எந்தக்கண்டத்தில் அமைந்துள்ளது
1) ஆசியா 2) ஐரோப்பா 3) ஆபிரிக்கா 4) அவுஸ்ரேலியா

04. இலங்கையைச் சூழவுள்ள கடலின் பெயர் என்ன?
1) வங்காள விரிகுடா 2) வங்கக்கடல் 3) செங்கடல் 4) சாக்கடல்

05. இலங்கையில் மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள நீர் வீழ்ச்சி எது?
1) அபர்டீன் 2) துன்கிந்த 3) பம்பரகந்த 4) தியலும

06. மண்சரிவு அபாயமுள்ள மாகாணம் எது?
1) ஊவா மாகாணம் 2) வட மேல் மாகாணம்
3) தென்மாகாணம் 4) வட மாகாணம்

07. கொல்லர் கம்மாலையில் அடுப்புக்கு தீ மூட்ட உதவுவது
1) பட்டறை 2) மின்விசிறி 3) புகைத்துருத்தி 4) விளக்கு

18. தேசப்படங்களில் வயல் வெளிகளைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நியம நிறம்
1) நீலம் 2) ஊதா 3) கறுப்பு 4) பச்சை

09. இலங்கையின் பிரஜையின் வதிவிடத்தை உறுதிப்படுத்த முதலில் செல்ல வேண்டிய இடம்
1) கிராம சேவகர் அலுவலகம் 2) பொலிஸ் நிலையம்
3) பிரதேச செயலகம் 4) சமாதான நீதவான்

10. பணம் செலுத்தாது இலவசமாகப் பெற்றுக் கொள்ளும் சேவை
1) தொலைக்காட்சி 2) மின்சாரம் 3) அஞ்சல் 4) குழாய்நீர்

11. "வேர்க்கொம்பு" எந்த தாவரப்பகுதியைக் காய வைத்த பகுதியாகும்
1) மஞ்சள் 2) இஞ்சி 3) கரணைக்கிழங்கு 4) வற்றாளை

12. குரக்கன் வித்தை ஒத்திருக்கும் வித்து எது?
1) கடுகு 2) பப்பாசி 3) மிளகு 4) வெண்டி

13. விலங்குகளின் உடலில் ஒட்டிப் பரம்பல் அடையும் வித்து
1) அச்சி 2) துத்திரி 3) காசித்தும்பை 4) கடல் மா

14. இலங்கைக்கே உரித்தான அனேக தாவரங்கள் காணப்படும் இடம் எது?
1) சிங்கராஜ வனம் 2) ஜயல 3) பேராதனைப்பூங்கா 4) வில்பத்து

15. கையின் வடிவமுள்ள இலையை உடைய தாவரங்களில் அடங்காதது
1) ஆமணக்கு 2) மரவள்ளி 3) பப்பாசி 4) வல்லாரை

16. ஆணகத்தை மட்டும் கொண்ட பூக்களில் அடங்காத தாவரம்
1) தென்னை 2) பூசனி
3) பாகல் 4) வெள்ளரி

17. கிளை கொள்ளும் தாவரம் அடங்காதது
1) பனை 2) தென்னை 3) பலா 4) கமுகு

18. நீரானது பனிக்கட்டியாக காணப்படும் இடம்
1) ஆறு 2) குளம் 3) கடல் 4) மலையின் சிகரம்

19. ஒருவருக்கு எந்நோய் ஏற்படின் அடிக்கடி சிறுநீர் கழிக்க நேரிடும்
1) இரத்த அழுத்தம் 2) பிரசர் 3) நீரிழிவு 4) சிறுநீர் கடுப்பு

20. பயிருக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைப் பிடித்து உண்பது
1) கும்பிடு பூச்சி 2) ஈசல் 3) இராமபாணம் 4) புள்ளப்பூச்சி

21. தண்டு கோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம்
1) கத்தரி 2) புடோல் 3) பூசணி 4) பாகல்

22. மலை நாட்டுப்பகுதியில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் இயற்கை அனர்த்தமாக அமையாதது
1) வறட்சி 2) மண்சரிவு 3) இடி மின்னல் 4) சுனாமி

23. ஒருவருக்கு தேள் கொட்டினால் தேள் கொட்டிய இடத்தில் பூசப்படும் பதார்த்தம்
1) சுண்ணாம்பு 2) தேன் 3) கற்றாளைச்சாறு 4) சீனிக்கரைசல்

24.

இக் கலைத்துவப் படைப்பின் பெயர் என்ன?
1) நடராஜ சிலை
2) இசுறுமுனி காதலர் சிலை
3) காவற் சிலை
4) அவுக்கனை சிலை

25.

அருகில் தரப்பட்ட தாவரத்தின் பெயர் என்ன?
1) இஞ்சி
2) கரணை
3) திப்பிலி
4) கண்டங்கத்தரி

26.


அருகில் தரப்பட்ட பெரியாரின் பெயர் என்ன?
1) டி.எஸ்.சேனநாயக்கா
2) S.W.R.D பண்டாரநாயக்க
3) C.W.W கன்னங்கரா
4) வண S.மஹிந்த ஹிமி

27.




பொருட்கள் அடைக்கப்பட்ட பெட்டிகளில் இவ்வாறு அடையாளம் இடப்பட்டதன் நோக்கம்
1) இரண்டுக்கு மேல் அடுக்கத்தடை
2) இரண்டுக்கு மேல் அடுக்கலாம்
3) இரண்டு இரண்டாக மேலே வைக்கவும்
4) எத்தனையும் அடுக்கலாம்

28. சினேக பூர்வமான நெருங்கிய தொடர்புடைய கூட்ட விலங்குகள் எவை

(i)


(ii)

(iii)



29. மிகவும் நெருங்கிய தொடர்பற்ற உருச்சோடியின் கீழ் கோடிடுக

(i)

(ii)

(iii)




(02) 30, 31 ஆகிய வினாக்களில் மேலே இருக்கும் நிரைகளில் தரப்பட்டு உள்ள நான்கு உருக்களின் தொடர்ச்சிக்கேற்ப புள்ளிக்கோட்டில் வரவேண்டிய விடையை 3 விடைகளிலிருந்தும் தெரிந்து கீறிடுக

30.



31.



(03) 32, 33 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட ஆறு படங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பரிசீலித்து, படங்களைச் சரியான தொடர்பு வரிசையில் கொண்டுள்ள விடையைத் தெரிந்து கீறிடுக

32.




(i) AFDEBC (ii) BFDECA (iii) FDBECA

33.




(i) ABDCFE (ii) BEADCF (iii) EDBAFC

34. பின்வரும் வரைபடத்தில் அம்புக்குறியின் திசைகளினால் காட்டப்பட்டுள்ள தொடர்புகளை ஆராய்க




பின்வரும் வரைபடங்களில் எது மேலே தரப்பட்ட வரைபடத்தில் உள்ள அதே விதமான தொடர்புகளைக் காட்டுகின்றது?



# மிருசுவில் படுகொலை நடந்தது என்ன?

## சாட்சியின் பகிர்வு

சிவப்புநிற அரைச்சைக்கிள் கொண்டு வந்தார். எனது சித்தப்பா, சின்னையா விஸ்வராசா லுமாலா பழைய கரிய லுடைய துவிச்சக்கர வண்டியில் வந்திருந்தார். சாம்பல் நிறத்தில் கட்டைக்காற்சாட்டையும், சாரமும் அணிந்திருந்தார். சாரத்தில் நிறம் ஞாபகம் இல்லை. துவிச்சக்கர வண்டியின் கரியலில் கோடரியும் உரபாக்கும் கட்டியிருந்தார்.சித்தப்பாவின் மகன் பிரதீபன் அல்லது பிரபா கட்டைக் களிசானும் ரீசேட்டும் அணிந்திருந்தார். நிறம் ஞாபகமில்லை. கையில் சிறிய கத்தி வைத்திருந்தார்.

சித்தப்பாவின் மகன் பிரசாத் கட்டைக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். நிறம் ஞாபகம் இல்லை. ஜெயச்சந்திரன் புதிய லுமாலா துவிச்சக்கரவண்டியில் சென்றார். பெரிய பெட்டி போட்ட நீலசாரம் மட்டும் அணிந்திருந்தார். கையில் கத்தி, உரபாக், கயிறு கொண்டு வந்தார். நான் புதிய கீரோ துவிச்சக்கரவண்டியில் சென்றேன். நான் நீலநிற பெட்டியுடைய பழைய சாரம் மட்டும் அணிந்திருந்தேன். கையில் பெரிய வெட்டுக்கத்தி, உரபாக், கயிறு கொண்டு சென்றேன்.

நாங்கள் ஒன்பது பேரும் பாம் வத்தைக்கு சென்றோம். எங்கள் வீட்டில் இருந்து 1/2 மைல் தூரத்தில் பாம்வத்தை இருக்கிறது. நாங்கள் விறகு வெட்டுவதற்காக அங்கு போனோம். எங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள மண் ஒழுங்கையால் துவிச்சக்கர வண்டியை தள்ளிக் கொண்டு சென்றோம். அந்தப்பாதை பாமுக்குச் செல்கிறது. சனங்கள் அந்தப்பாதையால் போய் வருவதுண்டு. பி.ப.3.15 மணிக்கு அங்கு சென்றோம்.

நாங்கள் பாமிற்குச் சென்று அங்குள்ள வீட்டுடன் கூடிய அடைக்கப்பட்ட காணிக்குள் துவிச்சக்கர வண்டிக்ளை விட்டோம். அதன்பின் அருகில் உள்ள காடு போன்ற இடங்களுக்குச் சென்று விறகு வெட்டினோம். விறகு வெட்டும் சமயத்தில் ஆட்கள் பிரிந்தோம். என்னுடன் ரவிவர்மன் உடன் இருந்து விறகு வெட்டினார். இயக்கத்தின் பொறுப்பில் முன்பு இருந்த காணி ஒன்றில் சிலர் தேங்காய் பிடுங்கினார்கள். தேங்காய் பிடுங்கியவர்களும் விறகு வெட்டியவர்களும் துவிச்சக்கரவண்டி விட்ட. இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது பி.ப. 4.00, 4.15 மணி இருக்கும். கொண்டு வந்த விறகு களையும், தேங்காய்களையும் துவிச்சக்கரவண்டியில் கட்டிக் கொண்டிருக்க சித்தப்பாவின் மகன் பிரசாத் கொய்யாக்காய் பிடுங்கித் தரும்படி கேட்டார். நாங்கள் நின்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள வீடு அமைந்துள்ள காணி ஒன்றிற்குள் கொய்யாப்பழம் பிடுங்க எல்லோரும் சென்றோம். நாங்கள் கொய்யாப்பழம் பிடுங்கச் சென்ற நேரத்தில் 2 ஆமி கொய்யாமரத்தின் கீழ் நின்றதைக் கண்டோம். கொய்யாப்பழம் பிடுங்கவில்லை. நாங்கள் தொட்டி ஒன்றுக்கு அடியில் சென்ற போது 2 இராணுவத்தினரைக் கண்டோம். தூரம் 25 மீற்றர் இருக்கும். ஒருவர் பச்சை வரியுடைய ரீசேட்டும், பச்சைகட்டைக்காற்சட்டையும் அணிந்திருந்தார். மற்றவர் கறுத்த பெனியனும், கறுப்பு கட்டைக்காற்சட்டையும் அணிந்திருந்தார். ஒருவர் துவக்கு வைத்திருந்தார். மற்றவர் கிறிஸ்கத்தி வைத்திருந்தார். காலில் செருப்பு அணிந்திருந்தார். தொப்பி அணிந்திருக்கவில்லை. அப்பொழுது ஆமி எங்களைக் கண்டு விட்டு சிங்களத்தில் ஏதோ சொன்னார்கள். சிங்களம் தெரிந்த சித்தப்பா எங்களை நிற்குமாறு ஆமி கூறியதாகக் கூறினார். நாங்கள் அந்த இடத்தில் நின்றோம். துவக்குடன் நின்ற ஆமி அந்த இடத்தில் நிற்க, கத்தியுடன் நின்ற ஆமி அப்பால் சென்றார். அப்பால் ஆமி சென்றதும். துவக்குடன் நின்ற ஆமி சிங்களத்தில் எங்களை எங்களிடம் இருந்த கத்திகளை கீழே போடுமாறு பணித்ததாக சித்தப்பா கூறினார். நாங்கள் அப்படி செய்ததும் கத்தியுடன் சென்றவர் வேறு நால்வருடன் திரும்பி வந்தார். வந்தபின் எல்லோரும் எங்களுக்கு கிட்ட வந்தனர். துவக்கு வைத்திருந்தவருக்கு சிறிய ஒரு கண். முகம் முழுவதும் தாடி ஓரளவு வளர்ந்திருந்த்து. கரியநிற மீசையும் இருந்தது. சாதாரண உயரமும், சாதாரண உடற்கட்டும் உடையவர் தலைமயிர் கட்டையாக இருந்தது.

கத்தியுடன் போனவர் பொது நிறம். மீசை வைத்திருந்தார். கிளீன் சேவ், தலைமயிர் கட்டையாக வெட்டியிருந்தார். மேற்படி இருவரையும் மீண்டும் கண்டால் எனக்கு அடையாளம் காட்டமுடியும். அவர்கள் நிற்கும்படி சொன்ன போது பி.ப 4.30 மணி இருக்கும். ஆறுபேரில் ஒருவர் சித்தப்பா வில்வராசாவுடன் சிங்களத்தில் கதைத்தார். அவர்களில் ஒருவர் எங்கள் எல்லோரையும் எல்.ரீ.ரீ.ஈ என உரத்த குரலில் சொன்னார் அத்துடன் ஏதோ எல்லாம் சிங்களத்தில் பேசினார். வந்த மற்ற நால்வரும் நீண்ட பச்சை வரியுள்ள ஜீன்சும், கொலறுள்ள கறுப்பு, பச்சை ஆகிய நிறங்களில் ரீசேட்டும் செருப்புகளும் அணிந்திருந்தனர். வந்த நால்வரில் ஒருவர் கொட்டனுடனும் மற்றவர்கள் துவக்கும் கொண்டுவந்தார்கள். கொட்டனுடன் வந்தவர் வளர்ந்தவர், சிவந்த நிறமுடையவர், பெரிய தாடி வைத்திருந்தார். கறுத்த ரீசேட் அணிந்திருந்தார். வடிவானவர். வந்த ஆறுபேரில் ஒருவர் கத்தி, ஒருவர் கொட்டன் மற்ற நால்வரும் துவக்கு வைத்திருந்தனர். அந்த ஆறு பேரில் 3,4 பேரை 'ஸ்சுவர்' அடையாளம் காட்டமுடியும். நாங்கள் அப்படி நின்றவேளையில் நான்கு ஆமிக்காரர் தங்களுக்குள் சிங்களத்தில் ஏதோ கதைத்தனர். கதைத்த பின்னர் கையில்லாதவரை இருவர் கட்டி தாம் இருந்த இடத்திற்கு சிறிது தூரம் அப்பால் கூட்டிச்சென்றனர். எங்கள் எல்லோரையும் வட்டமாக தள்ளி தள்ளி இருக்கச் சொன்னார்கள். அதன்பின் எங்களைச் சுற்றி நின்றார்கள். சுற்றி நின்ற நால்வரும் சித்தப்பா வில்வராசாவுடன் சிங்களத்தில் ஏதோ கதைத்தனர். சித்தப்பாவுடன் கதைத்துக் கொண்டிருந்த போது ரவிவர்மனை மீண்டும் கூட்டி வந்து எங்களுக்குப் பக்கத்தில் இருத்தினார்கள். 10,15 நிமிடத்திற்குள் ரவிவர்மனை திருப்பி கூட்டி வந்தார்கள் ரவிவர்மனை கூட்டி வந்த பின்னர் சித்தப்பாவின் மகனான சின்னபிள்ளை பிரசாத்தை எங்களால் பார்க்க முடியாத வேலியால் மறைக்கப்பட்ட இடத்திற்கு ஒரு ஆமி கூட்டிச் சென்றார். பிரசாத்தைக் கூட்டிச் சென்றவுடன் ஐந்து ஆமியும் துவக்கு பிடிகளாலும், கொட்டனாலும் அடித்தனர். அடிக்கும் பொழுது ஏதோ எல்லாம் சிங்களத்தில் சொல்லி அடித்தார்கள். அதில் எல்.ரீ.ரீ.ஈ என்ற சொல் மட்டும் தான் எனக்கு விளக்கியது. அவ்வேளையில் ஐயோ அடியாதையுங்கோ சேர் நான் வழமையில் வாறனான். இளநீர் பிடுங்கித் தாறனான் என்று மன்றாடினேன். நான் அப்படிச் சொன்ன போது என்னை எழும்பச் சொல்லி நான் கட்டியிருந்த சாரத்தை உரிந்து கையால் சுற்றிவிட்டு எனது கண்ணையும் வாயையும் இறுக்கிக் கட்டினார். சின்ன ஒன்றைக்கண் உள்ளவர்தான் எல்லோருக்கும் ஓடி, ஓடி அடித்தார். அத்துடன் எனது கண்ணையும் வாயையும் கட்டினார். அதே இடத்தில் வைத்து எனக்கு மேலும் அடித்தார். அநேகமாக தடியால் தான் அடித்தார்கள். நான் அந்த இடத்தில் கீழே விழுந்து விட்டேன். நான் விழுந்து கிடந்த போது எனது கால் கைகளுக்கு அருகில் வேறு ஆட்கள் விழுந்திருந்ததையும் உணர்ந்தேன். அனுங்கிய சத்தம் கேட்டது. விழுந்த பின்னும் அடித்தார்கள். சிறிது நேரம் மயங்கிக் கிடந்தேன். எனக்கு உணர்வு வந்தபின் சிங்களத்தில் ஏதோ கதைத்துக் கேட்டது. எனக்கு உணர்வு வந்தபோது முதலில் எனது கால் கைகளுக்கு இடையில் முனகிக் கொண்டிருந்தவர்கள் அந்த இடத்தில் கிடக்கவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன். அதன் பின் இரு ஆமிகள் எனது இரண்டு பக்க கைகளையும் பிடித்து தூக்கி எழும்பு காம்புக்கு போவம் என்று கொச்சைத்தமிழில் சொன்னார்கள். அவர்கள் இரண்டுபேரும் இருபக்கமும் பிடித்தவாறாக நான் நடந்து சென்றேன். அப்படி சென்றவேளையில் சிறிது தூரத்தில் இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் பிடித்து ஆட்டிவிட்டு எறிந்தமாதிரி இருந்தது. அந்த நேரத்தில் ஏதோ எனது உடலில் தட்டியதையும் உணர்ந்தேன். அத்துடன் எனது கண்களைக் கட்டியிருந்த சாரம் கழன்றுவிட்டது. பின் நான் நிலத்தில் பொத்தென விழுந்தேன். அப்படி நான் இடது பக்கமாக சரிந்து விழுந்தேன். அப்படி நான் விழுந்து கிடந்த போது ஒரு ஆளை இரண்டு ஆமி கொண்டு போவது தெரிந்தது. பெரிய ஆளை நடத்திக் கூட்டிச்சென்றது தெரிந்தது. நான் முன்பு விழுந்த இடத்திலிருந்து நான் தற்பொழுது கிடந்த இடத்தைத் தாண்டிக் கொண்டு சென்றனர். நான் கிடந்த இடத்திலிருந்து அவர்கள் கொண்டு என்ற தூரம் 10 மீற்றர் தூரம் இருக்கும். நான் விழுந்து கிடந்த வேளையில் எனது உடம்பு முழுவதும் நொந்து கொண்டிருந்தது. காயங்கள் எதுவும் இருப்பதாக நான் உணரவில்லை. என்னை வீசிவிட்டு வேலியைக்கடந்து வந்த இரண்டு ஆமிக்காரர் என்னை தூக்கினார்கள். நான் இருந்தேன். அப்பொழுது அவர்கள் இருவரும் எனது நெஞ்சிலும் முதுகிலும் தமது முழங்காலினால் அடித்தனர். அடித்தபோது நான் ஐயோ அம்மா என்று குழறிக்கொண்டு தலை நிலத்தில் மோதும் வகையில் கீழே விழுந்தேன். சிறிது நேரத்தில் எனது கைகள் இரண்டையும் பிடித்து எழுப்பி நடத்திச் சென்றனர். எனக்கு நெஞ்சிலும் முதுகிலும் அடித்தவர்களை அடையாளம் காண முடியாது. முக்கியமாக அச்சமயத்தில் இருளாக இருந்தமையால் அடையாளம் காணமுடியாதுள்ளது. என்னை அழைத்துச் செல்ல முன்னர் எனது கண்களில் கட்டியிருந்த சாரத்தை வேலியில் இருந்து ஆமி எடுத்ததைக் கண்டேன் அவர்கள் என்னை மலசல கூடக் குழி ஒன்றுக்கு அருகில்கொண்டு சென்று நிறுத்தினார்கள். குழியின் ஓரமாக என்னை நிறுத்தியிருந்தார்கள். பார்த்தபொழுது குழியின் ஒருபக்க மூடி திறக்கப்பட்டு சற்று அரக்கப்பட்டு நிலத்தில் காணப்பட்டது.

எனது ஒரு பக்கத்தில் கத்தியுடன் ஒரு ஆமியும் மறு பக்கத்தில் துவக்குடன் ஒரு ஆமியும் பின்னுக்கு என்னை பிடித்துக் கொண்டு ஒரு ஆமியும் நின்றதை உணர்ந்தேன் அத்துடன் குழிக்குள் நீரில் கால் கைகளை அடிக்கும் சத்தம் கேட்டது அதனை வைத்து குழிக்குள் யாரையோ குத்தியோ வெட்டியோ போட்டுள்ளதாகவும் கருதினேன் அந்த நேரத்தில் கத்தியுடன் நின்ற ஆமி சிங்களத்தில் ஏதோ கூற என்னைப் பிடித்துக் கொண்டு பின்னால் இருந்த ஆமி எனது கண்களைக் கட்டினார் அச்சமயத்தில் ஐயோ என்னை சாக்கொல்லப்போகிறார்கள் என எனது அம்மாவை நினைத்து கடவுளையும் நினைத்தேன் பிறகு எனது இரண்டு கைகளையும் கண்களைக் கட்டியிருந்த துணிக்கிடையில் வைத்து தள்ளிய பொழுது கட்டப்பட்டிருந்த துணி கீழே விழுந்தது அச்சமயம் நான் இப்படி சாவதைவிட சுட்டுச் செத்தாலும் பறவாயில்லை என நினைத்து தப்பியோட நினைத்தேன். மலசலகூட குழிக்கும் கத்தியுடன் நின்ற சிப்பாய்க்கும் இடையில் குழி ஓரமாக ஓடிச் சென்று அருகில் இருந்த கம்பி வேலி ஒன்றுக்கூடாக புகுந்து தப்பி ஓடினேன் நான் அப்படி ஓடிய போது வேலியில் இருந்த கதியால்களில் தடக்குப்பட்டு கதியால் முறிந்தது.

**நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இருக்குமாறு பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. நான் பயத்தால் அங்கே இருக்க மறுத்து ஈ.பி.டி.பி. இடம் விடுமாறு கேட்டேன் அந்த வகையில் நெல்லியடி ஈ.பி.டி.பி. யிடம் பொலிஸார் என்னை ஒப்படைத்தனர். மறுநாள் யாழ்ப்பாணம் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து 30.12.2000 அன்று ஈ.பி.டி.பி. என்னை ஏற்றிக் கொண்டு மந்திகை காரியாலயத்திற்கு கொண்டு வந்து அங்கு வைத்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பின்னர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பெரிய அதிகாரிகள் முன்னிலையில் எனது வாக்குமூலம் பெறப்பட்டது.**



(தொடரும்)...

# பலஸ்தீனுடன் வத்திக்கான் ஒப்பந்தம்



பலஸ்தீன தனிநாட்டுடன் முதலாவது உடன்படிக்கையில் வத்திக்கான் கைச்சாத்திட்டுள்ளது.

இஸ்ரேல், பலஸ்தீன் முரண்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இரு நாட்டுத் தீர்வுக்கான தைரியமான தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனவும் வத்திக்கான் அழைப்பு விடுத்துள்ளது.

பலஸ்தீன அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கத்தோலிக்க தேவாலய செயற்பாடுகளின் பின்தங்கிய நிலைமை தொடர்பிலும் இந்த உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் வத்திக்கானின் இந்த தீர்மானம் குறித்து இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு தனது கவலையை வெளியிட்டுள்ளது.

சமாதான இணக்கப்பாடுகளின் முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஓர் அவசர நடவடிக்கையாக இது உள்ளதாக இஸ்ரேல் சுட்டிக் காட்டியுள்ளது.

எனினும் நீண்டகாலமாக நீடிக்கும் இஸ்ரேல் பலஸ்தீன் முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவர ஒரு தீர்க்கமான ஊக்கமளிக்கும் செயற்பாடாக இந்த உடன்படிக்கை அமையும் என வத்திக்கானின் வெளி விவகார அமைச்சர் பேராயர் போல் கலகெர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான நேரடி சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கலாம் எனக் குறிப்பிட்ட அவர் இதன் ஊடாக இரு நாட்டு தீர்வு எட்டப்படும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உறுப்புரிமை அற்ற கண்காணிப்பு நாடாக 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை பலஸ்தீனத்தை அங்கீகரித்திருந்ததுடன் இதனை வத்திக்கான் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குஜராத்தில் வெள்ளப்பெருக்கு

(குஜராத்)

மேற்கிந்திய மாநிலமான குஜராத்தில் வெள்ளத்தின் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலிருந்து சுமார் 10,000 பேர் மேடான பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக நிவாரணப்பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பருவமழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவுகள் மற்றும் வீடுகள் இடிந்து விழுந்தது ஆகியவற்றினாலேயே பெருமளவிலான உயிரிழப்புகள் ஏற்பட்டன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


உயிரிழப்புகள் தவிர, கால்நடைகள் மற்றும் பயிர்களும் பரந்துபட்ட அளவில் மிக அதிகமாக அழிந்துள்ளன என்றும் மாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 90 ஆண்டுகளில் இல்லாத வகையில் சௌராஷ்ட்ரா பகுதியில் இப்போது மோசமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள தாக அங்கிருந்து வரும் தகவல் கள் கூறுகின்றன.

கரையோர மாவட்டமான அம்ரேலியே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அங்கு மட்டும் 600 கிராமங்கள் நீரால் சூழப்பட்டுள்ளதாக குஜராத்தின் சுகாதார அமைச்சர் நிதின் பட்டேல் பிபிசியின் ஹிந்தி சேவையின் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

# குவைத்தில் தற்கொலைத் தாக்குதல்



(குவைத்)

குவைத்தின் தலைநகரில் உள்ள ஒரு ஷீயா மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் 25 பேர் பலியாகியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை தொழுகை நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள இமாம் சாதிக் மசூதியில் இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது.

இம்மாதிரியான தாக்குதல்கள் குவைத்தில் மிக அரிதாகவே நடந்திருக்கின்றன. தங்களுடைய அமைப்பைச் சேர்ந்தவரே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாக இஸ்லாமிய அரசு தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய அரசு அமைப்பானது ஷியா முஸ்லிம்களை ஏற்பதில்லை. சமீபத்தில் சவுதி அரேபியாவிலும் இரண்டு ஷியா மசூதிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

# ஒரு பாலின திருமணம் அமெரிக்காவில் அனுமதி

ஒரு பாலின தம்பதிகள் திருமணம் செய்துகொள்ள அமெரிக்கா முழுவதுமே உரிமை இருப்பதாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இந்தத் தீர்ப்பையடுத்து, அமெரிக்காவின் ஐம்பது மாகாணங்களிலும் ஒரு பாலின திருமணங்கள் சட்டபூர்வமாகியிருக்கின்றன.

தற்போது அமெரிக்காவின் 14 மாகாணங்களில் ஒரு பாலினத் திருமணங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

பத்தாண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவில் இது தொடர்பாக சட்டப் போராட்டம் நடைபெற்றுவந்தது.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டவுடனேயே, ஒரு பாலினத் திருமணங்கள் அங்கீகரிக்கப்படாத மாகாணங்களான ஜார்ஜியா, ஒஹையோ, மிச்சிகன், டெக்ஸாஸ் மாகாணங்களில் இருந்தவர்கள் திருமணம் செய்து கொள்வதற்காக விரைந்தனர்.

ஆனால், அதிகாரபூர்வமான நடைமுறைகள் முடிவடையும் வரை திருமணங்களை நடத்த முடியாது என அதிகாரிகள் தெரிவித்து விட்டனர்.

இந்தத் தீர்ப்பு, அமெரிக்காவின் வெற்றி என அதிபர் ஒபாமா குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், பழமைவாத கிறிஸ்தவர்கள் இந்த தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# EU மறுசீரமைப்பு கமரூன் மகிழ்ச்சி

ஐரோப்பிய ஒன்றியத்துடனான மீள் பேச்சுவார்த்தை குறித்து பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியாவின் உறுப்புரிமை மற்றும் மறுசீரமைப்பு குறித்த பேச்சுவார்த்தை சீரான முறையில் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

பிரசல்ஸ்சில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுடான உத்தியோகபூர்வ சந்திப்பை தொடர்ந்து பிரித்தானியப் பிரதமர்



...துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயங்கள் சாத்தியமற்றது என பலரும் தம்மிடம் கூறியதாகவும் அவற்றை பொய்யாக்குவோம் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளதாக பிரித்தானிய பிரதமர் குறிப்

# தாய்ப்பாலில் காத்திருக்கும் ஆபத்து

(ஜேர்மனி)

ஜேர்மனி நாட்டில் அண்மையில் குழந்தை பெற்றுள்ள பெண்களின் 'தாய்ப்பாலை' ஆய்வுக்கு உட்படுத்தி பரிசோதனை செய்ததில், அவற்றில் புற்றுநோயை உருவாக்கும் வேதிப்பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜேர்மனியில் உள்ள வெவ்வேறு மாகாணங்களில் வசித்து வரும் 16 பெண்களிடம் தாய்ப்பால் சேகரிக்கப்பட்டு அதனை அண்மையில் பரிசோதனை செய்துள்ளனர்.

இந்த ஆய்வு முடிவில், தாய்ப்பாலில் Glyphosate என்ற வேதி பொருள் ஒரு மில்லி லீற்றருக்கு 0.210 முதல் 0.432 நனோ கிராம் வரை உள்ளதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சாதாரண தண்ணீரில் 0.100 என்ற வீதத்தில் இருந்தால் தான் இந்த வேதி பொருள் ஆபத்தை விளைவிக்காது. இந்த அளவிற்கும் மேலாக தாய்ப்பாலில் வேதி பொருள் கலந்திருப்பது ஆய்வாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த பரிசோதனை முடிவுகளை Oldenburg பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Irene Witte என்பவரிடம் விளக்கியபோது, இந்த அளவிற்கு தாய்ப்பாலில் வேதி பொருள் கலந்து இருப்பது மிகவும் ஆபத்தானது.

அதே சமயம், 16 பெண்களிடம் மட்டுமே இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளதால், உடனடியாக இந்த விவகாரத்தில் ஒரு முடிவுக்கு வர முடியாது.

தாய்ப்பால் கொடுக்கும் பல பெண்களிடம் அடுத்தடுத்த பரிசோதனைகளை நடத்திய பின்னரே உறுதியான முடிவை கூற முடியும்.

# பொதுநோக்கு மண்டபம் அமைப்பதில் வலி. கிழக்கு பிரதேச செயலகம் பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

பொதுநோக்கு மண்டபத்தை அமைப்பதற்கான காணியை பெற்றுக் கொடுப்பதில் வலி. கிழக்கு பிரதேச செயலகம் பாரபட்சமாக நடந்துகொள்வதாக அச்சுவேலி தெற்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் அச்சுவேலி தெற்கு ஆவரங்காலில் பொது நோக்கு மண்டபமொன்றை அமைப்பதற்கான காணியை பெற்றுத் தருமாறு அப்பகுதி கிரமசேவையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கான காணி இக்கிராம சேவகர் பிரிவில் தற்போது இல்லையென்றும், பொதுநோக்கு மண்டபத்துக்காக பிரதேச சபைக்கு சொந்தமான காணியை ஒதுக்கித்தர முடியாதெனவும் கிராம சேவையாளர் மறுப்புத் தெரிவித்த நிலையில் இப்போது நோக்கு மண்டபத்தை அமைக்கும் முயற்சிகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன.

ஆனால் இப்போது இதே வலி. கிழக்கு பிரதேச செயலகத்தின் கீழ்வரும் நீர்வேலிப் பகுதிக்கான பொதுநோக்கு மண்டபமொன்றை அமைப்பதற்கு அங்குள்ள பிரதேச சபைக்கு சொந்தமான காணியில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் அதிதியாக கலந்து கொண்டு இக்கல்லை நாட்டி வைத்திருப்பதாக அச்சுவேலி விவசாய அபிவிருத்திசபையின் தலைவர் ந.தவராசா சுட்டிக்காட்டினார்.

இது ஒரு பாரபட்சமான நடவடிக்கை. எமது கிராமத்துக்கான பொது நோக்கு மண்டபத்துக்கு பிரதேச சபையின் காணியை ஒதுக்க முடியாதென்றால் நீர்வேலிக்கு அது எவ்வாறு சாத்தியமாகுமென அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த இரு இடங்களையும் உற்று நோக்கும்போது இதனை ஒரு சமூக ரீதியான பாரபட்ச நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம். பொது அபிவிருத்தியில் இவ்வாறான வகை தெரிவு இனிமேலும் இடம்பெறாதிருப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (168)

# முச்சக்கர வண்டி விபத்து இருவர் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதிச் சந்தியில் ஆட்டோ ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியதில் இருவர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 11.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஸ்ரான்லி வீதியில் வேகமாக வந்த ஆட்டோ கஸ்தூரியார் வீதிக்கு திரும்ப முற்பட்ட வேளையே இந்த விபத்து இடம்பெற்று ஆட்டோ குடைசாய்ந்தது.

அதனைச் செலுத்திய இளைஞன் காயமடைந்ததுடன், ஆட்டோவில் வந்த வயோதிபப் பெண்ணொருவரும் சிறிய காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். (இ)

# ஐ.ம.சு.முன்னணியிலேயே போட்டியிடுவார் மகிந்த

## உதய கம்மன்பில நம்பிக்கை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியிலே போட்டியிடுவார் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தான் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் போட்டியிடுவதாக முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தமை தொடர்பில் அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் போட்டியிடுவதற்கு வெளிப்படையாக, வாய்ப்பு கிடைக்கும் எனவும் அதற்கான மூலோபாய நடவடிக்கைகளை ஊடகங்களுக்கு தெரியப்படுத்துவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது கை சின்னம் அல்ல, டார்லி வீதியில் உள்ள கட்சி அலுவலகம் அல்ல, மகிந்த ராஜபக்ஷ எவ்விடத்தில் உள்ளாரோ அவ்விடத்திலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சுதந்திரக் கட்சியில் மகிந்த போட்டியிடுவது குறித்து தீர்மானம் எதுவுமில்லை

## என்கிறார் யாப்பா

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை சுதந்திரக் கட்சியில் போட்டியிடச் செய்ய வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்து இறுதித் தீர்மானங்கள் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுதந்திரக் கட்சியை ஐக்கியப்படுத்தி தேர்தலில் போட்டியிடுவோம். சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாக தேர்தலில் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிணற்றிலிருந்து...

மேலும் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை வீட்டிலிருந்து புறப்பட்டு சென்ற அவர் மதியம் வரை வீடு திரும்பவில்லை எனவும் பின்னரே அவரைத் தேடிச் சென்றதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

அதன்பின்னரே குறித்த வீட்டிலிருந்து 250 மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள கிணற்றில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசியல்...

மீண்டும் அரசியலுக்கு வருவார் என்று கூட நினைக்கமாட்டோம். நாம் அவரை அரசியலுக்கு வரவிடவும் மாட்டோம்.

தனக்கு இந்த நாட்டில் அரசியல் எதிர்காலம் இல்லை என்பதை முன்னாள் ஜனாதிபதி புரிந்து கொள்ளவேண்டும்.

அவ்வாறு புரிந்து கொண்டு, தான் ஒரு ஒரு நல்ல அரசியல்வாதி என்ற நினைப்பு அவருக்கு பெயரளவிலேனும் இருக்குமானால் அவர் அரசியலில் இருந்து ஒய்வு பெறவேண்டும்.

எனினும், கடந்த காலங்களில் அவர் அனுபவித்த சுகபோக வாழ்க்கையை மறக்க முடியாமல் தான் அவர் மீண்டும் அரசியலில் ஈடுபட முண்டியடிக்கின்றார்.

இலஞ்சப் பணத்தால் அவர் அனுபவித்த அந்த வினோதமான வாழ்க்கையை மறக்க முடியாமலே அவர் மீண்டும் அரசியலில் ஈடுபட முயற்சிக்கின்றாரே தவிர நாட்டின் மீதும், நாட்டு மக்களின் மீதுள்ள பற்றினால் அல்ல என்றும் கூறினார்.

## சீனாவின்...

பலத்தை இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை மையப்படுத்தி வலுப்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், சீனாவின் இந்த மூலோபாயத்தை முறியடிக்கும் நோக்கில் இந்தியா, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள முக்கியமான நாடுகளுடன் இருதரப்பு கூட்டு கடற்படைப் போர்ப்பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே பிரான்ஸ் கடற்படையுடன் இணைந்து அரபிக் கடற்பகுதியில் இந்தியா வருண என்ற கூட்டுப் பயிற்சியை கடந்த ஏப்ரல், மே மாதங்களில் மேற்கொண்டது.

இதையடுத்து, அமெரிக்காவுடன் இணைந்து மலபார் என்ற பெயரிலும், பிரித்தானியாவுடன் இணைந்து கொங்கன் என்ற பெயரிலும், ரஷ்யாவுடன் இணைந்து இந்திரா என்ற பெயரிலும், இந்தியா போர்ப்பயிற்சிகளை நடத்தவுள்ளது.

அத்துடன், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முக்கியமான நாடுகளான, அவுஸ்ரேலியா, இலங்கை, ஜப்பான், இந்தோனேசியா, தாய்லாந்து, மியான்மார், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் இணைந்தும் அடுத்த சில மாதங்களில் இந்தியா போர்ப்பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

## மகிந்தவின்...

தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட நல்லாட்சி என்ற கொள்கையை பொதுத் தேர்தலின் பின்னரும் தொடரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரண்டு...

ஆம் திகதிமுதல் செப்ரெம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெறும்.

ஆகஸ்ட் 17,18 மற்றும் 19 ஆகிய திகதிகளில் பரீட்சை நடைபெறாது. எனினும் 5 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டதன் பிரகாரம் ஆகஸ்ட் 23 ஆம் திகதி நடைபெறும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

## தேர்தல்...

கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கு 300 கோடி ரூபா செலவிடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல்கள் செயலகத்தின் ஊடகப் பேச்சாளராக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹம்மத் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

## பொதுத் தேர்தலில்...

நடவடிக்கைகள் பற்றி இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

தமிழ் மக்களின் வெற்றிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சிக்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு.

வேட்பாளர்கள் தெரிவு, புதியவர்களுக்கு இடம் கொடுத்தல், மற்றைய கட்சிகளுடனான பிரதிநிதிகளின் பங்கீடு என்பவை பற்றி இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

ஒவ்வொரு மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி பிரதிநிதிகள் மிகவும் விரிவாக எடுத்துக் கூறியிருந்தார்கள். இவைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு தேர்தல் வியூகங்கள் அமைக்கப்படும். தமிழ் மக்களின் உடனடித் தீர்வு பற்றியும் சர்வதேசம் எதிர்பார்ப்பு பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதாக சுமந்திரன் குறிப்பிட்டார்.

## நீதியான...

ஆணையாளர், இதனை மேற்கொள்ளும்போது அரசியல் யாப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பயன்படுத்தப்படுமென்றும் அறிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கைகள் யூலை மாதம் ஆறாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் புதிய நாடாளுமன்றம் செப்ரெம்பர் மாதம் முதல் திகதி கூடவுள்ளது.

நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை 2014 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலுக்கு அமைய நடத்தப்படுமென்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

தபால் மூலம் வாக்களிப்போரின் விண்ணப்பங்கள் யூலை மாதம் 3 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் அவர் கூறினார்.

யூலை ஆறாம் திகதி முதல் அரசாங்க மற்றும் பொலிஸ் சேவையில் மேற்கொள்ளப்படும் சகல இடமாற்றங்களும் நிறுத்தப்படுமென்று கூறிய தேர்தல்கள் ஆணையாளர், உயர்தரப் பரீட்சை நடைபெறுகின்ற காரணத்தினால் வாக்களிப்பு நிலையங்களாக பாடசாலைகளை பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்வதற்கு கவனம் செலுத்தியுள்ளதாகவும் அறிவித்தார்.

தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் ஒரு வாரத்துக்குள் தமக்கு அதனை அறிவிக்கவேண்டுமென்றும் தனியாக போட்டியிடுவதா இல்லாவிட்டால் கூட்டமைப்பாக போட்டியிடுவதா என்பதை அரசியல் கட்சிகள் தனக்கு அறிவிப்பது அவசியமென்றும் தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

# காணாமற்போனோர் குறித்து சர்வதேச விசாரணை தேவை

## மூதூரில் உறவுகள் ஆர்ப்பாட்டம்



(திருகோணமலை)

காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நேற்றைய மூதூர் விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை விசாரணை நடைபெற்றபோது செயலகத்திற்கு வெளியில் ஒன்றுதிரண்ட மக்கள் உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கையில்லை. சர்வதேச விசாரணை தேவை என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஜனாதிபதி ஆணைக்குழுவில் தங்களுக்கு நம்பிக்கையில்லை, சர்வதேச தரத்திலான விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வைத்தனர்.

காலை 9 மணிக்கு ஆரம்பமான போராட்டம் 11.30 மணி வரை முன்னெடுக்கப்பட்டது

# ஆஸிக்கு ஆட்கடத்தல் சிக்கினார் சூத்திரதாரி

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு இயந்திரப் படகு மூலம் சட்டவிரோதமான முறையில் ஆட்களை அனுப்பும் நடவடிக்கையுடன் தொடர்புடைய ஒருவர் புத்தளம் மாவட்டத்தின் சிலாபம், முன்னேஸ்வரம் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது தாய் மற்றும் தந்தையுடன் இணைந்து சில காலமாக இவ்வாறு சட்டவிரோதமானமுறையில் ஆட்களை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்துள்ளமை விசாரணைகளின்மூலம் தெரியவந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரின் தாயும், தந்தையும் இதற்கு முன்னர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரின் தாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதோடு, தந்தை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நபர் ஒருவரை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்புவதற்காக இவர்களால் ஐந்து முதல் எட்டு இலட்சம் வரையிலான பணம் அறவிடப்பட்டுள்ளது. சிலரிடம் பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் இவர்கள் அந்தப் பிரதேசங்களை விட்டு தலைமறைவாகி இருந்துள்ளமை பொலிஸ் நிலையங்களில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ளவரிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாக சிலாபம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மகிந்தவின் கூட்டணியில் தேர்தலில் போட்டி

## தேசிய சுதந்திர முன்னணி அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்ட ணியில் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி உட்பட பல கட்சிகள் இம்முறை பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டணியில் போட்டியிடத் தயாராக இருப்பதாக அதன் ஊடகப் பேச்சா ளர் மொஹமட் முஸ்ஸாமில் கூறியுள்ளார்.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார் படுத்தப்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பம் கிடைக்கும் வரையே நாங்கள் காத்திருந்தோம்.100 நாட்களில் நாட்டின் பயணத்தை பின்நோக்கி திருப்பி, ஈழ தேசிய வாதத்தை போதித்து, நாட்டின் பொருளாதாரத்தை சீரகுலைத்து, நல்லாட்சியை முற்றாக இல்லாமல்செய்து, நாட்டை சீரழிக்கும் இந்த பயணத்தை மாற்றியமைப்பதற்காக அனைத்து சக்திகளையும் ஒன்றிணைப்போம். அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து மகிந்த ராஜபக்சவை பிரதமராக்கி, ஆகஸ்ட் 18 ஆம் திகதி நாட்டில் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் எதிர்ப்பார்ப்பில் தேசிய சுதந்திர முன்னணி இந்த தேர்தலில் போட்டியிடும் எனவும் மொஹமட் முஸ்ஸாமில் கூறியுள்ளார்.

# தனித்தா, கூட்டாகவா முடிவு எதுவுமில்லை

## என்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்தா அல்லது வேறு கடசிகளுடன் இணைந்து கூட்டணி அமைத்தா போட்டியிடுவது என்பது குறித்து இதுவரை முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

எனினும் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட கூடிய ஆர்வமாக இருப்பதாக அந்த கட்சியின் பொருளாளர் அஸ்லம் மொஹமட் சலீம் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் கட்சியின் அதியுயர் பீடம் கூடி இறுதி முடிவை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மகிந்தவாத அணியென்பது நாடோடிகள் உள்ள கூட்டம்

## சோமவன்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

மஹிந்தவாத அணி என்பது இந்நாட்டில் நாடோடிகள் உள்ள அணியாகும் என மக்கள் சேவகக் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுடன் மாத்திரம் இணையமாட்டோம்.

இந்நாட்டில் உண்மையான ஜனநாயகத்தை ஏற்படுத்த முற்போக்கு முன்னணி ஒன்று உருவாகும். அந்த முன்னணியுடன் இணைந்து நாம் செயற்படுவோம். அந்த முன்னணியை ஏற்படுத்தும் பணியில் நான் ஈடுபட்டுள்ளேன். ஒரு பக்கம் கட்சியையும் வளர்க்கிறேன். மறுபக்கம் முன்னணியை வளர்க்கிறோம்.

ஜே.வி.பி பிறப்பில் இருந்து 2 முக்கிய விடயங்களுக்கு முன்னின்றது. அதுதான் ஜனநாயகம் மற்றும் சமூக நியாயம்.

1962 இற்குப் பின் ஜனநாயகத்தில் 2015 ஜனவரி 8 ஆம் திகதி பாரிய பாதிப்பு ஏற்பட்டது.

அது தொடர்பில் ஜே.வி.பி ஒரு வார்த்தை பேசவில்லை. இதனை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லவேண்டும் என நான் மூன்று மாதங்கள் போராடினேன்.

அந்த சூழ்ச்சியை தோற்கடிக்கவேண்டும் என கூறினேன். அந்த சூழ்ச்சியை தோற்கடிக்காததுதான் இன்று நாடு சீரகுலையக் காரணம்.

இதனை வெளிப்படுத்தினால் மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க வாயடைத்துப்போவர். ஜே.வி.பி.க்கு அதனை செய்யமுடியாது போனது.

ஜே.வி.பியை பாதுகாத்த கோசம் கைவிடப்பட்டுள்ளது. அது உபாய மார்க்கத் தவறு. எமது ஒரு பக்கம் ஜனநாயகம் மற்றைய பக்கம் சமூக நியாயம்.

ஒன்றுதான் சூழ்ச்சி நடக்கவில்லை என்று கூறுவது.

ஜனாதிபதித் தேர்தல் நடந்த 8 ஆம் திகதி என்ன நடந்தது என்று 6 ஆம் வகுப்பு மாணவர்கள் கூட சொல்வர்.

அன்று வாக்கு எண்ணுவது நிறுத்தப்பட்டது, பெறுபேறு வெளிவருவது நிறுத்தப்பட்டது. இந்நாட்டில் அது முதல் தவறு.

நாம் ஒருபோதும் கண்டிராத வேலை இது. அங்கிருந்து சூழ்ச்சி. இன்று ஜேவிபி - ஐதேகவுடன் இணைந்து ஒரே கோசத்தை எழுப்பத் தொடங்கியுள்ளது.

ஜேவிபி ஜனநாயக்த்தை கைவிட்டால் அங்கு எவரும் இருக்க மாட்டார்கள்.

இவர்கள் சில அரசியல் கூத்துக்காரர்கள் என நான் கூறுகிறேன்.

இங்கு குழப்பிக் கொண்டது ஜேவிபி புனிதர்கள். புனிதமற்ற தலைவர்களுக்கு ஜேவிபி தோழர்கள் அப்படி அல்ல.. அவர்கள் புனிதர்கள் அல்ல. அனைவரும் செய்த அர்ப்பணிப்பால் ஜேவிபி புனிதமாகிறது.

நான்கு பேர் அடங்கிய குழுவால் இந்த புனிதத் தன்மை இல்லாது போயுள்ளது.

ஜேபிவி.யின் அனைத்தையும் வெளிப்படுத்த எனக்கு உரிமை உண்டு. லால்காந்த போன்ற ஜேவிபி விலைபேசிகள் உள்ளனர்.

மோசமான கதைகளை சொல்வார். ஜேவிபி.யை வங்சக்கள் இருவர் சாப்பிட்டதாக அவர் கூறுவார்.

இந்த சண்டியருக்கு பெயர் சொல்லவும் முதுகெலும்பு இல்லை.

நான் இரு பெயர்களையும் சொல்கிறேன். வீரவன்ச, சோமவன்ச. பெயர் நினைவு இருப்பதில்லை தானே.

வீரவன்சவை அப்படி சொன்னாலும் சோமவன்சவிற்கு அப்படி சொல்ல முடியாது. அப்படி சொல்பவர் மீது கட்சிக்காரர்கள் காறித் துப்பாதிருந்தால் சரி.

அவர்களுக்கு அவ்வாறு கூடாதவை சொல்ல முடியும் என்றால் நானும் இந்நிலையை நாட்டு மக்களுக்கு சொல்ல முடியும். நான் மத்திய குழு கூட்டத்திற்கு செல்வதில்லை என லால் காந்த இன்று கூறுகிறார்.

உண்மை அப்படி அஜீரணமான கட்சி அது. ரோஹன தோழர் கொலை செய்யப்பட்ட போது கட்சியை கட்டியெழுப்ப முடியாது என அனைவரும் கூறினர் எனவும் சோமவன்ச மேலும் தெரிவித்துள்ளார்

# 10 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றம்

பொலிஸ் சேவையிலுள்ள மேலும 10அதிகாரிகளுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதற்கேற்ப, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் நால்வருக்கும், உதவிப் பொலிஸ் அதிகாரிகள் ஐவருககும் மற்றும் பொலிஸ் அதிகாரியொருவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு குற்றவியல் பிரிவுக்குப் பொறுப்பாக பதில் பணிப்பாளராக கே.என்.ஜே. வெதசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தலைமையகம் மேலும் குறிப பிட்டுள்ளது.

# குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட வேட்பாளர்கள் வேண்டாம்

## கோரிக்கை விடுக்கும் கபே

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நபர்களுக்கு தமது கட்சிகளில் போட்டியிட வாய்ப்பளிக்க வேணடாம் என தேர்தல் கண்காணிப்பில ஈடுபட்டு வரும் கபே அமைப்பு அரசியல் கட்சிகளிடம் வேண்டுகோள விடுத்துள்ளது.

கபே அமைப்பின் பணிப்பாளர் ரஜித் கிர்த்தி தென்னக்கோன் இது குறித்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்தபோது ஊழல் மற்றும் கொலை குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நபர்கள் தற்போது அரசியலில் ஈடுபட்டு வருவதாக கூறி இதன் மூலம் அரசியல் சம்பந்தமாக மக்களுக்குள் பாரிய வெறுப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கும் விதத்தில், அதற்கான தகுதி வாய்ந்த நபர்களை அரசியல் கட்சிகள் தம் வேட்பாளர்களாக தேர்தலில் நிறுத்துமாறு அரசியல் கட்சிகளிடம் அவர் வேண்டு கோள விடுத்தார்.


## விநியோகம், பத்திரிகை மடிக்க ஆட்கள் தேவை

பத்திரிகை விநியோகம், பத்திரிகை மடிப்பதற்கு ஆட்கள் தேவை. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம், முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. அத்துடன் பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.